விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 22 செவ்வாய்க்கிழமை (06.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 077

# கண்டியில் பதற்றம்
# ஊரடங்குச்சட்டம் அமுல்
## இன மோதல்கள் வெடிக்கும் ஆபத்து

**(கண்டி) கண்டி, தெல்தெனிய-திகன பிரதேசத்தில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியதில் அங்கு பதற்றநிலை உருவாகியுள்ளது. சிங்கள - முஸ்லிம் இனங்களுக்கிடையே ஏற்பட்ட முறுகல் நில்லையைத் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் உடனடியாக அமுல் படுத்தப்பட்டுள்ளது.**

கடந்த மாதம் 22-ம் திகதி கண்டி தெல்தெனிய பிரதேசத்தில் பாரவூர்தி சாரதி முச்சக்கரவண்டியில் சென்ற சிலரால் தாக்கப்பட்டார்.

அவர் தாக்கப்படும் காட்சி அருகில் உள்ள வர்த்தக நிலை 23☛



பிரதான முக்கிய மூன்று அரசியல் கட்சிகள்
## பிரதமர் ரணிலுக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவு

(கொழும்பு)

14 குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய நம்பிக்கையில்லா பிரேரணையை, பிரதமர் ரணிலுக்கு எதிராக கொண்டுவர மூன்று முக்கிய கட்சிகள் தீர்மானித்துள்ளதாக, பிவித்துரு ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் ஒன்றிணைந்த எதிரணி ஆகியன பிரதமர் 24☛

கண்டி நிர்வாகத்திற்குட்பட்ட
## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

கண்டி நிர்வாக மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்க கல்வி அமைச்சினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கண்டி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளின் அதிபர்களுக்கும் 24☛

## தொடருந்துடன் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு
### பரந்தனில் நேற்று பகல் துயரம்

(பரந்தன்)

கிளிநொச்சி -- பரந்தனில் தொடருந்துடன் மோதுண்டு குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி கண்ணகி அம்மன் கோவிலடி மலையாளபுர 24☛



## சிறைச்சாலைக்கு கஞ்சா கொண்டு சென்றவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலைக்கு கஞ்சா கொண்டு சென்ற இளைஞன் ஒருவர் நேற்றைய தினம் கைது 24☛

பொருளாதாரம் தொடர்பில்
## இன்றைய அமைச்சரவையில் முக்கிய அவதானம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் இன்றைதினம் நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்ட 24☛

சட்ட ஒழுங்கு அமைச்சை
## பொன்சேகாவுக்கு வழங்க மீண்டும் பரிந்துரை

(கொழும்பு)

சட்டம். ஒழுங்கு அமைச்சுப் பதவியை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்குவதற்கான பரிந்துரையை ஜனாதிபதியிடம் முன்வைக்க ஐக்கிய தேசியக் 23☛

ஊரடங்கையும் மீறி
## முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள்

(கண்டி)

கண்டியில் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனையும் மீறி முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையை நிகழ்த்தும் நோக்குடன் அங்கு பல நூறு சிங்களர்கள் குவிந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கண்டியில் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி பணிப்பு
### பக்கச்சார்பற்ற விசாரணைக்கும் உத்தரவு



(கொழும்பு)

கண்டி திகன பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பக்கசார்பற்றதும் சுயாதீனமானதுமான விசாரணையொன்றை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

பொலிஸாருக்கும் பாதுகாப்பு 23☛

## சீமெந்தின் விலை முப்பது ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்படும் 2 வகை சீமெந்துகளின் விலை 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

குறித்த விலை அதிகரிப்பிற்கான அனுமதியை நுகர்வோர் அதிகார சபை வழங்கியுள்ளது.

அதற்கமைய 50 கிலோ 24☛

## அன்பு மாணவர்களே!

உங்கள் அபிமான வலம்புரியில் பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் நாளை 7-ம் திகதி புதன்கிழமை தொடக்கம் வெளிவரவுள்ளது. உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

## முஸ்லிம்களை மையப்படுத்தி கலவரத்தை தூண்ட முயற்சி
அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு


(கொழும்பு)

நாட்டின் முஸ்லிம் சமூகத்தைப் மையப்படுத்தி சில இனவாதக் குழுக்கள் இனக்கலவரத்தைத் தூண்ட முயற்சிப்பதாக, அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் சாடியுள்ளார்.

கண்டி தெல்தெனிய மற்றும் திகன ஆகிய பிரதேசங்களில் வெடித்துள்ள கலவரத்தைத் தொடர்ந்து, அமைச்சர் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் பதற்ற சூழல் நிலவி வருகின்ற நிலையில். 23☛

## மட்டக்களப்பு விகாராதிபதியும் கண்டி போராட்டத்தில் குதிப்பு



(கண்டி)

கண்டி, திகனயில் வன்முறைகளில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க கோரி தெல்தெனிய பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி சுமண ரத்தின தேரர் தலை 23☛

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# ஆசிரியர் இடமாற்றங்களை நிறுத்தி வைக்குமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் வலயத்துக்குள்ளான இடமாற்றங்களை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அவர்களினால் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி தவணையில் இடைப்பகுதியில் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டாம் எனவும் கடந்த உள்ளூராட்சி தேர்தலால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட மேற்படி இடமாற்றத்தை பாடசாலையின் இரண்டாம் தவணை ஆரம்பிக்கும் திகதியான 23.04.2018ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வலயத்துக்குள் இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தற்போதய பாடசாலை, இடமாற்றம் வழங்கப்படவுள்ள பாடசாலை, பாடம் மற்றும் தற்போதய பாடசாலையில் கடமைக்கு அறிக்கை செய்த திகதி அடங்கிய பட்டியலினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறும் முறையான அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னரே இடமாற்ற நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சேவையின் தேவை கருதி தவணையின் இடைப்பகுதியில் அவசியமாக இடமாற்றம் செய்யவேண்டியிருப்பின் அதற்கான காரணத்தினைத் தெளிவுபடுத்தி தனது அனுமதியைப் பெற்ற பின்னரே இடமாற்றம் செய்யப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

# சிரியா போர் வன்முறையை கண்டித்து வடமராட்சியில் நேற்று கண்டனப் பேரணி






(கரணவாய்)

சிரியாவில் இடம்பெறும் போர் வன்முறையினைக் கண்டித்து வடமராட்சியில் கண்டனப் பேரணி ஒன்று நடைபெற்றது.

தொண்டைமானாறுப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று காலை 9.00 மணியளவில் தொண்டைமானாறு சந்தியில் இருந்து இக் கண்டனப் பேரணி ஆரம்பமானது.

"நிறுத்து நிறுத்து வன்முறையை நிறுத்து, சிரியாவில் யுத்தப் படுகொலையை நிறுத்து, கொல்லாதே கொல்லாதே சிறுவர்களைக் கொல்லாதே, மனிதத்தை மதிப்போம்" ஆகிய வாசகங்கள் தாங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு புறப்பட்ட பேரணி கடற்கரை வீதி வழியாக பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

அங்கு பிரதேச செயலருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றினைப் பேரணியில் கலந்து கொண்டோர் பிரதேச செயலரிடம் ஒப்படைத்தனர். (ம-60)

# இலங்கை இராணுவத்தினர் சமூக ஊடகங்களை பயன்படுத்த கட்டுப்பாடு

## மகேஸ் சேனநாயக்க உத்தரவு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், படையினரும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க புதிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

இதன்படி, முகநூல், கீச்சகம் உள்ளிட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இராணுவத்தினர், தமது பதவி நிலை மற்றும் இராணுவ அடையாளங்களையோ, சீருடையுடனான படத்தையோ, இராணுவ கருவிகள், மற்றும் நிறுவனங்களின் படத்தையோ பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு, அரசியல், மதம், இன நல்லிணக்கத்துடன் தொடர்புடைய விடயங்களை பதிவேற்றுவதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும், இன்னொருவருக்கு மாற்றிக் கொள்வதற்கும், கருத்து வெளியிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டுப்பாடுகளை மீறும் இலங்கை இராணுவத்தினரைக் கண்காணிப்பதற்காக, சமிக்ஞைப் படைப்பிரிவைச் சேர்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறும் படையினர் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம)


10ஆம் ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில்
21 - 01 - 1957



தாயக மண்ணில்
06 - 03 - 2008

மாமனிதர் கிட்டினன் சிவநேசன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்-தமிழ்த் தேசிய கூட்டமைப்பு),
(முன்னாள் பொது முகாமையாளர்-பேரிணயம்,
வட மாகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனம்)

கூட்டுறவால் மக்கள் வாழ்வு மேலோங்க
கூடி நின்றே உழைத்தாயப்பா–தமிழ்
தேசியத்தில் பற்றுறுதி மிக்கோனாய் வாழ்ந்து
தேசமெலாம் பரப்புரைகள் செய்தாயப்பா
நாடாளுமன்றில் நம்மவர் உரிமைக்காய்
நாள்தோறும் குரல் கொடுத்தாயப்பா
ஒன்றென்ன இரண்டென்ன
ஓராயிரம் ஆண்டு ஓடியே மறைந்தாலும்
உன்நினைவு எம்மனதில்
என்றென்றும் நிலைத்திருக்கும்!

இந்நாளில் அன்னாருடன் சாவடைந்த சாரதி **பெரியண்ணன் மகேஸ்வரராசா** அவர்களையும் நினைவு கூருகின்றோம்.

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தகவல்:- குடும்பத்தினர்

(3126)


# உள்நாட்டு கைத்தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்த இடமளிக்கமுடியாது-ஜனாதிபதி

(கொழும்பு)

உள்நாட்டு கைத்தொழில் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வெளிநாட்டு முதலீடுகளுக்கு இடமளிக்க முடியாது என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தேசிய கைத்தொழில் துறையில் எதிர்கால நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், தேசிய கைத்தொழில்களுக்கு சவால்களை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு வெளிநாட்டு கைத்தொழில்களுக்கு இடமளிக்க கூடாது என்பதை தேசிய முதலீட்டு சபை கருத்தில் கொள்ள வேண்டும்.

தேசிய கைத்தொழிலை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் எடுக்கப்படும். உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தேசிய கைத்தொழில் துறை பலமடையும் போதே நாட்டில் சரியானதொரு பொருளாதாரக் கொள்கை கட்டியெழுப்பப்படும்.

அரச வங்கிகளினூடாக சலுகை வழங்கும் வேலைத் திட்டமொன்றினை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தற்போது கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் அரச துறையின் பங்களிப்பினை போன்றே தனியார் துறையினரின் பங்களிப்பும் அத்தியாவசியமாகும்.

தேசிய கைத்தொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்ட சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி அவற்றிற்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய தீர்வுகளை கண்டறிவதற்கு அது தொடர்பான சகல அரச நிறுவனங்களினதும் பிரதிநிதிகளையும் தேசிய வர்த்தகர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றினை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, ரிஷாட் பதியுதீன், லக்ஷ்மன் கிரியெல்ல, சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, கைத்தொழில் வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கே.டி. என்.ரஞ்சித் அசோக.

அபிவிருத்தி உபாய மார்க்கங்கள், சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளர் சாந்தனி விஜேயவர்தன, அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவாவிதாரண, தேசிய கைத்தொழில் துறையினர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ம)

# இலங்கை குடும்பங்கள் உட்பட அகதிகள் குழுவொன்று அமெரிக்கா பயணம்




அமெரிக்காவில் குடியமருவதற்காக நவுறுதீவு அகதிகள் முகாமிலிருந்து ஐந்தாவது அகதிகள் குழு அமெரிக்கா சென்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அவுஸ்திரேலியாவுடனான அகதிகள் மீள்குடியேற்ற திட்ட உடன்படிக்கைக்கு அமைய குறித்த குழு அந்த நாட்டுக்குச் சென்றுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ரோஹிங்கியா முதலான நாடுகளின் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த எட்டு சிறுவர்கள் அடங்கலாக 29 அகதிகள், நவுறு தீவிலிருந்து நேற்றுமுன்தினம் வெளியேறியுள்ளனர்.

அவர்களுள் மூன்று குழந்தைகள் அடங்கலாக இரண்டு இலங்கை குடும்பமும் அடங்குகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேன்புல்லுக்கும், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பரக் ஒபாமாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், கடலோர தடுப்பு முகாம்களிலிருந்து 1,250 அகதிகளை குடியேற்ற இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

இந்தக் குடியேற்றத் திட்டம் கடந்த 15 மாதங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், நவுறு தீவிலிருந்து 139 அகதிகளும், பப்புவா நியூகினியா மானஸ் தீவிலிருந்து 85 அகதிகளும், கடந்த செப்டம்பர் மாதம் முதல் மீள்குடியேற்றத்திற்காக வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்க அதிகாரிகள் குழு நவுறு தீவில் தங்கியிருப்பார்கள் என்றும், எனினும் அடுத்தக்கட்ட குழுவை மீள் குடியமர்த்துவதற்கான நேர்காணலை மேற்கொள்வதற்கான திட்டத்தை அவர்கள் இன்னும் திட்டமிடவில்லை என்றும் அகதிகள் செயற்பாட்டு கூட்டணியின் பேச்சாளர் இயன் ரின்டோலை மேற்கோள்காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இந்த ஆட்சி தொடர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு; பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து

# தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை பாராளுமன்றக்குழுவே தீர்மானிக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

(உப்புவெளி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமாகவிருந்தால் இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு மற்றும் தீர்மானம் என்னவென்பதை எமது பாராளுமன்றக்குழு கூடி ஒருமித்த தீர்மானம் மேற்கொள்ளும்.

இது குறித்து ஆராய இன்று செவ்வாய்க்கிழமை கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு கூடவுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்

சமூகசேவையாளரும் பிரபல வர்த்தகருமான அமரர் கந்தையா துரைராசாவின் மகன் அமரர் விஜயகுமார் (மயூரன்) ஆகியோரின் ஞாபகார்த்தமாக உப்புவெளியில் அமைக்கப்படவுள்ள முதியோர் இல்லத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வருவது வராதது பாராளுமன்றின் நடைமுறையில் சாதாரண விடயமாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பாராளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என வதந்திகள் வருகிறதே தவிர அது இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. இதற்கு கூட்டு எதிரணியினரும் சில அதிருப்தியாளர்களும் முயற்சிக்கிறார்களென அறியமுடிகிறது.



அவ்வாறு கொண்டு வரப்படுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் என்ன முடிவு எடுக்கவேண்டுமென்பதை பாராளுமன்ற குழு கூடியே ஒரு கூட்டுத்தீர்மானம் மேற்கொள்வோம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நாம் என்ன தீர்மானம் எடுக்க வேண்டுமென்பதை எமது பாராளுமன்ற குழு கூடி முடிவுகளை மேற்கொள்ளும்.

எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் கூடும்படி அழைப்பு விடுத்துள்ளோம். அப்போது கூடும் நாம் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தால் என்ன செய்ய வேண்டும் என ஒத்தமுடிவாக எடுப்போம். எம்மைப் பொறுத்தவரை இன்றைய ஆட்சி தொடர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இந்த அரசு இரண்டரை வருடங்கள் ஆட்சி நடத்தியுள்ளது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்முயற்சிகள் இலகுவானதாகவிருக்கவில்லை.

ஆனால் அம்முயற்சிகள் தொடரப்படுகின்றன. தொடரப்பட்ட வேளையில்தான் உள்ளூராட்சித் தேர்தல் வந்தது. இந்த அரசாங்கம் தொடர வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

ஆனால் எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை எம்மால் திட்டவட்டமாக கூறமுடியாது. ஆனால் அரசியல் தீர்வு முயற்சிகள் தொடரவேண்டும். தொடர்வதன் மூலம் நாட்டில் ஒரு அரசியல் சாசனம் கொண்டு வரப்படவேண்டும். அது பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வரவேண்டும்.

தீர்வைப்பெறும் விடயங்களில் தமிழ் மக்கள் கூடுதலான ஆர்வத்துடன் இருக்கிறார்கள் என்பதே உண்மை. நியாயமான தீர்வு கொண்டு வரப்படவேண்டும் என்பதில் நாம் ஆர்வமாகவும் கவனமாகவும் இருக்கிறோம். தேசியப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும். தீர்த்து வைக்கப்படாமல் நாட்டிலுள்ள எப்பிரச்சினைக்கும் நல்ல முடிவு காணமுடியாது.

ரணிலின் அரசாங்கமாவிருக்கலாம் ஜனாதிபதியின் ஆட்சியாக இருக்கலாம் இல்லை மகிந்த ஆட்சியாக விருக்கலாம் இதுதான் உண்மை நிலை. தீர்க்கப்படாத நிலையில் எந்த அரசும் நிலைத்திருக்க முடியாது.

இந்த அரசின் மீது தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுவதற்கு பல காரணங்களுண்டு. இருந்த போதிலும் ஒரு கட்சியென்ற வகையில் நாம் எதையும் தூக்கி எறிந்துவிடமுடியாது. எமது நோக்கங்களையும் கருமங்களையும் முன்னெடுத்துச் செல்ல பல வழிகளையும் தந்திரோபாயங்களையும் கையாண்டு முடிவைக்காண நாம் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

எமது முயற்சி தோல்வி அடையும் வெற்றிபெறும் என்ற முடிவுக்கு நாம் இப்பொழுது வரமுடியாது. தமிழ் மக்கள் தீவிரமாகவும் பக்குவமாகவும் நேர்மையாகவும் செயற்பட்டார்கள் என்ற உயர்ந்த அபிப்பிராயத்தை சர்வதேச சமூகம் எடுக்கவேண்டும். தமிழர்கள் தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் கெடுத்து விட்டார்கள் என்ற முடிவுக்கு சர்வதேசம் வர நாம் இடமளிக்கக் கூடாது. வெற்றி காண்பதற்குரிய அத்தனை முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்வோம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போதும் பொது தேர்தலின்போதும் மக்கள் வழங்கிய ஆணையை எந்த விதத்திலும் பாதிக்கவுமில்லை நீக்கவுமில்லை.

மக்கள் இன்றைய அரசுக்கு வழங்கிய ஆணை தொடருகிறது.

2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக வர தீவிர முயற்சி எடுத்தார். அதில் அவர் தோல்வி கண்டார். உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளானது அரசாங்கத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியே தவிர மகிந்த ராஜபக்ஷவின் மீது கொண்ட விருப்பமல்ல. மகிந்தவின் எந்த செயலுக்காகவும் உள்ளூராட்சி தேர்தலில் மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முத்தரப்பு யோசனைகளுடன் உறுப்பினர்கள் நெருக்கடியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மூன்று வகையான கொள்கைகளுடன் பிரிந்து நிற்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமது பதவிகளை தக்கவைத்துக்கொள்வதோடு, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் இணைந்து பயணிக்கும் நோக்கில் ஒரு தரப்பும், தேசிய அரசாங்கம் தொடர வேண்டுமென்ற கொள்கையுடன் பிறிதொரு தரப்பும் உள்ளது.

அதே சந்தர்ப்பத்தில் சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் முனைப்பில் சுமார் 7 உறுப்பினர்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியை விட்டு விலகும் முனைப்பில் உள்ளவர்கள் ஏற்கனவே தமது நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

அவர்களை, ஒரு மாதத்திற்கு பொறுமை காக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 43 பேர், தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகவும் இராஜாங்க அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ராஜபக்ஷ குடும்பத்தின் கலந்துரையாடலில் முக்கிய தீர்மானங்கள்

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களின் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

2020ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவை பெயரிடுவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிப்பதற்கும் குறித்த கலந்துரையாடலின் போது, தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சர்வதேச நாணய நிதியம் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் உடனடியாகநாட்டைவிட்டுவெளியேற வேண்டுமென முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய சேவைகள் ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தற்போது இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்திற்கு எவ்வித பணிகளும் எஞ்சியில்லை எனவும் அவர் தெரிவித்தார்.



சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளுக்கு அமைய செயற்பட வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு கிடையாது என தெரிவித்துள்ள அவர் சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

15 வீத பெறுமதி சேர் வரி யோசனையை சர்வதேச நாணய நிதியமே பரிந்துரை செய்தது எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதமருக்கு எதிராக மட்டுமே நம்பிக்கையில்லாப் பிரேரணை


## வாசுதேவ திட்டவட்டம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மாத்திரமே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக பொதுவாக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று கொண்டு வரப்படுமாயின், அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பாக மாறிவிடும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)




### வோர்னர் - குயின்ரன் காரசாரமான மோதல் அரங்கேறிய டர்பன் டெஸ்ட் முடிவுக்கு வந்தது

# அவுஸ்திரேலியா அசத்தல் வெற்றி

டர்பனில் நடந்த முதல் டெஸ்டில் அசத்திய அவுஸ்திரேலிய அணி, 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சொந்த மண்ணில் சொதப்பிய தென்னாபிரிக்க அணி ஏமாற்றம் அடைந்தது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் டர்பனில் நடந்தது. முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 351, தென்னாபிரிக்கா 162 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய 227 ஓட்டங்கள் எடுத்தது.



பின், 417 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி, நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில், 9 விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களை எடுத்திருந்தது. குயின்ரன் (81), மோர்னே மோர்கல் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு ஒரு விக்கெட் மட்டுமே தேவைப்பட்ட நிலையில், ஹேசல்வுட் பந்தில் குயின்ரன் (83) ஆட்டமிழந்தார். 2ஆவது இன்னிங்சில தென்னாபிரிக்க அணி 298 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மோர்கல் (3) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் ஸ்ராக் 4, ஹேசல்வுட் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதனையடுத்து, 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணி 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 9 விக்கெட் (5+4) வீழ்த்திய அவுஸ்திரேலியாவின் மிட்சல் ஸ்ராக், போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவானார். 2ஆவது டெஸ்ட் எதிர்வரும் 9ஆம் திகதி போர்ட் எலிசபெத் நகரில் ஆரம்பமாகிறது.

**22 பந்து... 5 ஓட்... ஒரு விக்கெட்**

நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் மொத்தம் 22 பந்துகள் மட்டுமே வீசப்பட்டது. இதில் தென்னாபிரிக்க அணி, முதல்நாள் ஓட்ட எண்ணிக்கையுடன் (293), கூடுதலாக 5 ஓட்டம் மட்டுமே (298) எடுத்தது. அவுஸ்திரேலியா சார்பில் ஒரு விக்கெட் வீழ்த்தப்பட்டது.

**வோர்னர் - ஹொக் மோதல**

போட்டியின் 4ஆம் நாளாட்டத்தின் தேநீர் இடைவேளையின்போது அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர், தென்னாபிரிக்காவின் குயின்ரன் டி ஹொக், வார்த்தை மோதலில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது. இது குறித்த 'வீடியோ' வெளியானது.

இரு அணி வீரர்களும் மாடிப்படி ஏறி, 'டிரசிங் ரூம்' சென்று கொண்டிருந்த போது, குயின்ரன் டி ஹொக்கை நோக்கி ஏதோ கூறிக் கொண்டே வோர்னர் சண்டையிட முயற்சித்தார்.

அப்போது உஸ்மான் கவாஜா, நாதன் லியன் உள்ளிட்ட சக ஆஸி வீரர்கள் வோர்னரை சமாதானப் படுத்தி அழைத்துச் சென்றனர். இதுகுறித்து இரு அணி வீரர்களும் மாறி, மாறி, புகார் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் கூறுகையில், "வோர்னரின் தனிப்பட்ட விடயத்தை கூறி குயின்ரன் திட்டினார்," என்றார்.

தென்னாபிரிக்க அணி முகாமையாளர் மொஹமட் மூசாஜீ கூறுகையில், "தென்னாபிரக்க வீரர்களின் சொந்த விடயத்தை கூறி வோர்னர் திட்டினார்," என்றார்.

இதுகுறித்து ஐ.சி.சி., போட்டி மத்தியஸ்தர் விரைவில் விசாரணை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சாதிக்குமா இலங்கை சிங்கங்கள்

### இன்று இந்தியாவுடன் முதல் சவால்

முத்தரப்பு 'ரி20' தொடரின் முதல் சவாலில் இலங்கை அணி, இந்தியாவைச் சந்திக்கிறது.

இலங்கை தனது 70 வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறது. இதைக் கொண்டாடும் வகையில் முத்தரப்பு 'ரி20' தொடர் நடக்கிறது. இதில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கின்றன. கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடக்கும் முதல் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் மோதுகின்றன.



**ஹோலி ஓய்வு**

கடந்த ஆண்டு இங்கு நடந்த தொடரில் டெஸ்ட் (3-0), ஒருநாள் (5-0) மற்றும் 'ரி20' (1-0) என, ஒட்டுமொத்தமாக 9-0 என வென்று நாடு திரும்பியது இந்திய அணி. இம்முறை இந்திய அணியில் ஹோலி, தோனி, புவனேஷ்வர் குமார், பும்ரா, பாண்ட்யா, குல்தீப் யாதவ் என ஆறு வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

**ரோகித் தலைவர்**

ரோகித் சர்மா தலைமையில் இந்திய அணி களமிறங்குகிறது. சமீபத்திய தென்னாபிரிக்க தொடரில் துடுப்பாட்டத்தில் ஏமாற்றிய இவர், அதற்கு பரிகாரம் தேட முயற்சிக்கலாம். இவருக்கு ஷிகர் தவான் துணையாக இருப்பர்.

நடுத்தர வரிசையில் தென்னாபிரிக்க தொடரில் நம்பிக்கை கொடுத்த ரெய்னா இடம் உறுதி. அடுத்தடுத்த இடங்களில் லோகேஷ் ராகுல், மணிஷ் பாண்டே வரலாம். விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தினேஷ் கார்த்திக், 6ஆவது இடத்தில் வரும் பட்சத்தில், மணிஷ் பாண்டே இடம் கேள்விக்குறிதான். புதிய வரவுகளான தீபக் ஹூடா, ரிஷாப் பன்ட்டும் போட்டியில் உள்ளனர்.

**பந்துவீச்சு கூட்டணி**

வேகப்பந்து வீச்சைப் பொறுத்தவரையில் ஷர்துல் தாகூர், உனத்கட் இடம்பிடிக்கலாம். 'சுழலில்' சகாலுடன், தமிழகத்தின் வாஷிங்டன் சுந்தர் இணைந்து சாதித்தால், வெற்றிக் கொடி நாட்டலாம். 5ஆவது பந்துவீச்சாளர் இடத்தில் சகலதுறை வீரர் தேர்வு செய்யப்பட்டால், விஜய் ஷங்கர் அல்லது மொஹமட் சிராஜ் சேர்க்கப்படுவர் எனத் தெரிகிறது.

**ஓயாத போட்டிகள்**

இலங்கை அணி இந்த சீசனில் மட்டும் 6 டெஸ்ட், 8 ஒருநாள், 4 'ரி20' என 18 போட்டிகளில் பங்கேற்றது. இதனால் வீரர்கள் களைப்பாக உள்ளனர். கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 40 போட்டிகளில் இலங்கை தோற்றுள்ளது. இருப்பினும் சமீபத்தில் பங்களாதேஷ் மண்ணில் ஒருநாள் தொடரை வென்ற உற்சாகம் இலங்கையிடம் உள்ளது.

இதனால், இந்திய அணிக்கு வெற்றி அவ்வளவு எளிதாக இருக்கப்போவதில்லை. சண்டிமல், தரங்க, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா என பலரும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் சுரங்க லக்மல், சமீர, ஷானக, தனஞ்செய கைகொடுக்கலாம்.

**இறுதிப் போட்டி எப்படி?**

ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் இரண்டு முறை மோதும். லீக் போட்டிகள் முடிவில், புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்கள் பிடிக்கும் அணிகள் வரும் மார்ச் 18ல் நடக்கும் இறுதியில் பலப்பரீட்சை நடத்தும்.

**இதற்கு முன்...**

கடந்த 1998ல் இலங்கை, தனது 50ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியது. இதற்காக நடத்தப்பட்ட முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்தியா, இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதின. இதன் இறுதியில் இலங்கையை வீழ்த்திய இந்தியா, கிண்ணம் வென்றிருந்தது.

**ஆடுகளம் சாதகமா?**

பொதுவாக இந்திய துணைக் கண்டத்து ஆடுகளங்கள் சுழலுக்கு சாதகமாகத்தான் இருக்கும். பிரேமதாச மைதான ஆடுகளம் போகப் போக மந்தமாகி விடும்.

**மழை வருமா?**

போட்டி நடக்கும் கொழும்பில், வானம் மேகமூட்டமாகக் காணப்படும். மழை வர 6 சதவீதம்தான் வாய்ப்புள்ளது.

**10**

இந்தியா, இலங்கை அணிகள் இதுவரை 14 'ரி20' போட்டிகளில் மோதியுள்ளன. இதில், இந்தியா 10 போட்டிகளில் வென்று ஆதிக்கம் செலுத்துகிறது. இலங்கை அணி 4ல் வென்றுள்ளது.

## 'ஆண்டவன் சொல்றான் அருணாசலம் முடிக்கிறான்'

### ஹற்றிக் விக்கெட் குறித்து தாஹிர் போட்ட பதில் ருவிட்

பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் ஹற்றிக் விக்கெட் எடுத்த லெக் ஸ்பின்னர் இம்ரான் தாஹிருக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாழ்த்து பதிவு ஒன்றையிட்டிருந்தது.

அதற்கு அருணாச்சலம் படத்தில் ரஜினி பேசிய வசனத்தை பதிலாக அளித்துள்ளார் இம்ரான் தாஹிர்.

பாகிஸ்தான் சுப்பர் லீக் என்ற சர்வதேச வீரர்கள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடரை பாகிஸ்தான் நடத்தி வருகிறது.

இத்தொடரின் மூன்றாவது சீசன் டுபாயில் நடைபெற்று வருகிறது. இந்த சீசனில் கராச்சி, லாகூர், பெஷாவர், குவெட்டா, இஸ்லாமபாத், முல்தான் ஆகிய அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

இதில் முல்தான் சுல்தான் மற்றும் குவெட்ட கிளாடியேட்டர்ஸ் அணிகள் இடையே நடந்த போட்டியில் முல்தான் சுல்தான் அணியின் இம்ரான் தாஹிர் ஹட்ரிக் எடுத்தார்.



இதற்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி (2018ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக தாஹிர் விளையாடுகிறார்) தனது டுவிட்டர் பக்கத்தில், "அனைவரும் சேர்ந்து விசில் அடியுங்கள் நமது ஹட்ரிக் வீரருக்காக" என்று பதிவிட்டிருந்தனர்.

இதறகு இம்ரான் தாஹிர், "மிக்க நன்றி... உங்க மொழியில சொல்ல வேண்டும் என்றால், ஆண்டவன் சொல்றான் அருணாச்சலம் முடிக்குறான். பொறுத்து கொள்ளுங்கள் நான் இன்னும் சென்னை மொழியை கற்றுக் கொண்டிருக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

# மாணவர்கள் அதிகமாகவுள்ள பாடசாலைக்கு மேலாளரை நியமிக்க அரசாங்கம் தீர்மானம்



(கொழும்பு)

1000இற்கு மேற்பட்ட மாண வர்களைக் கொண்ட பாட சாலையில் ஒரு மேலாளரை நியமிப்பதற்கு தீர்மானித் துள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று திங் கட்கிழமை இடம்பெற்ற நிக ழ்வொன்றில் கலந்துகொ ண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

'2000இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் ஒரு மேலா ளர் மற்றும் உதவி மேலா ளர் ஒருவரை நியமிப்பதற்கு அமைச்சரவையில் முன் மொழிவுசெய்ய இருக்கின்றேன்.

இவர்கள் பாடசாலை நிர் வாகங்களில் நேரடியாக தலையிட முடியும். அத்து டன் தலைமை ஆசிரி யர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மாணவர்களின் கல்வி தொடர்பில் சிறந்த வேலைத் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்' என வும் கல்வியமைச்சர் காரிய வசம் மேலும் தெரிவித் தார். (இ-7)

# 15 வயதையடைந்தவர்களுக்கு தேசிய அடையாள அட்டை

## ஆட்பதிவு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

ஆட்கள் பதிவுத் திணைக் களத்தால் 15 வயதை அடைந் தவர்கள் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளலாம் என அறி விப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர் பாக அத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரி விக்கையில், "15 வயதை பூர்த்தியடைந்தவர்களும் இனிவரும் காலங்களில் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள விண்ணப் பங்களை அனுப்பலாம்.

இந்த தேசிய அடையாள அட்டை வழங்கும் செயன் முறையில் வயதெல்லை மாத்திரமே குறைக்கப்பட் டுள்ளது. இருந்த போதும் அடையாள அட்டை வழங் கப்படும் முறையில் வழமை யான நடைமுறையே பின் பற்றப்படும்.

கடந்த காலங்களில் 16 வயதை நிவர்த்தி செய்தவர் களுக்கு மட்டுமே தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு வந் தது. எதிர்காலத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனை த்து மாணவர்களும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# பொது இடங்களில் குப்பை கொட்டுபவர்களை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பொது இடங்களில் குப் பைகளை கொட்டும் நபர் களை கைது செய்யும்படி பொலிஸாருக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூரா ட்சி அமைச்சர் பைசர் முஸ் தபா தெரிவித்துள்ளார்.

பலர் பொது இடங்களில் முறையற்ற விதத்தில் குப் பைகளை கொட்டுவது தொட ர்பில் பல்வேறு முறைப்பாடு கள் கிடைக்கப் பெற்றதன் காரணமாகவே அமைச்சர் இந்தப் பணிப்புரையை வழ ங்கியுள்ளார்.

மேலும், இதுவரை வீதி யோரங்களில் அகற்றப்படா மல் குவிந்திருக்கும் குப்பை களை உடனடியாக அகற்று மாறும் அமைச்சர் கொழு ம்பு மாநகர சபை ஊழியர் களுக்கு பணிப்புரை விடுத் துள்ளார். (இ-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567 1532


# இலங்கைக்கு வருகை தந்த இளவரசர் வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஆளணி எதிர் கண்ணிவெடிகளை தடை செய்வதற்கான சாச னத்தின் விசேட தூதுவரான ஜோர்தானைச் சேர்ந்த இள வரசர் மிரெட் ராட் அல் ஹுசைன் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை சந் தித்துக் கலந்துரையாடினார்.

இளவரசர் மிரெட் ராட் அல் ஹுசைன், மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை க்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை அரசாங்கத் தின் அழைப்பை ஏற்று இல ங்கை வந்துள்ள விசேட தூதுவர் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்ப னவை நேற்று முன்தினம் சந்தித்தார். இலங்கை அர சாங்கம் நிலக்கண்ணிவெடி கள் ஒப்பந்த திட்டத்தில் கைச்சாத்திட்டமைக்கு வாழ் த்துத்தெரிவித்த விசேட தூதுவர், இந்த உடன்படிக் கையை வலுவூட்டுவதில் இலங்கை முக்கிய பங்காற்றும் என்றும் இந்த சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். (இ-7)


முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 1937 - 06 - 28

விண்ணில் 2017 - 02 - 15



அமரர்.

கி.சிவக்கொழுந்து

திதி:
மாசி அபரபக்க பஞ்சமி

எம் உள்ளமெலாம் நிறைந்த இதயவிளக்கே
ஆண்டொன்று சென்றதுவோ-எமை
கண்ணீர்க் கடலில் தவிக்கவிட்டு
எம்மை வழிப்படுத்தி நெறிப்படுத்தி
ஆலமரத்து நிழலாய் நின்றாயே ஐயா
நீயில்லா இந்த இடைவெளி...
உணர்கின்றோமே செந்தணலாய்
உன் புன்னகை வதனமெங்கே
தெள்ளிய சிந்தனையெங்கே தேடுகின்றோமே ஐயா...

அண்ணாசிலையடி, கரணவாய். (3115) குடும்பத்தினர்.


# இராசி பலன்

**06.03.2018**

மாசி 22, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 4.20 மணிவரை

சுவாதி பின்னிரவு 12.10 மணிவரை

சுபநேரம் 10.55-12.25 மணிவரை

இராகுகாலம் 3.25-4.55 மணிவரை

வளவன்

கிரகநிலை: சுக், புத — சூரி — கேது — சனி — குரு.செவ் — சந் — ராகு

சந்திராஷ்டமம்: ரேவதி

**மீனம்:** குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, வளர்ச்சி காண வழிபாட்டினை மேற் கொள்ள வேண்டிய நாள்.

**மேடம்:** காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட சேர்க்கை யுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பகைவர் கள் விலகுவர், முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** புண்ணிய காரியங்களில் ஆர் வம் காட்டுவீர்கள், பெருமை கள் வந்து சேர பிள்ளை யாரை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**கும்பம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப் புண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பிரியமான வர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** தொலை தூரத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேர லாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு, செய்தொழில் மேன்மை யுண்டு.

**மகரம்:** தொழில் ரீதியான முன்னேற்ற முண்டு, பெரிய மனிதர்க ளின் சந்திப்பு இடம்பெற லாம், ஆரோக்கியமான நாள், பூர்வீகச் சொத்துக்க ளால் ஆதாயமுண்டு.

**சிம்மம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பணத் தேவை கள் பூர்த்தியாகும் நாள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங் களைத் தேடி வரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ் வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பயணங்களால் பல னுண்டு, சயன சுகக் குறை வுகள் ஏற்படலாம், சுப செலவுகள் கூடும் நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங் கள் இடம்பெறலாம், கொடுக் கல்-வாங்கல்கள் ஒழுங் காகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** உடல் நலன் சிறாகி உற்சாகத் தோடு பணிபுரிவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு, குடும்ப சுகமுண்டு.

# பொது இடத்தில் புகைப்பிடிப்போர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சுகாதாரத் துறையினரிடம் மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொது இடத்தில் புகைப் பிடிப்பவர்கள் மீது சுகாதாரத் துறையினர் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாக யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் நாளுக்குநாள் இந்த நடவடிக்கை அதிகரித்து செல்வதால் பெண்கள், சிறுவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

புகைத்தல் மதுபானத்துக்கு எதிராக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் நாட்டின் சகல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று யாழ்.மாவட்டத்திலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் ஒரு சில சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை தவிர ஏனைய பகுதிகளில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் குறிப்பாக பாடசாலைகள் மற்றும் கோவில்களுக்கு அருகில் புகைப்பொருட்கள் விற்பனை செய்வது தொடர்பாக சுகாதாரத்துறையினர் சோதனைகளில் ஈடுபடுவதும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும் மிக மிக அரிதாகவே காணப்படுகிறது.

மேலும் பேருந்து தரிப்பிடங்களில் புகைப்பிடிப்போரின் அளவு அதிகரித்து காணப்படுகிறது. இதை சுகாதாரத் துறையினர் கண்காணிப்பதில்லை. குறிப்பாக யாழ்ப்பாண பேருந்து நிலையத்தில் அதிகளவு பிரயாணிகள் சென்று வருகின்றனர்.

அவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போக்குவரத்து ஊழியர்கள் சிலர் பொது இடத்தில் புகைப் பிடிக்கின்றனர். இது சிறுவர்கள் மற்றும் பெண்களை அதிகளவு அசௌகரியத்துக்குள்ளாக்குவதுடன் பாதிப்புக்குள்ளாக்கி வருகிறது.

இதுபோன்று ஏனைய பேருந்து நிலையங்களிலும் இடம்பெறுவதாகவும் இந்த விடயத்தில் சுகாதாரத்துறையினர் அசண்டயீனமாக செயற்படுவது வேதனைக்குரிய விடயமாகவுள்ளது என பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக சுகாதாரத்துறையினர் கவனம் எடுத்து பொது இடத்தில் புகைப்பிடிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-9)

## முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளி விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் தா.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலக அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கயந்தன், சிறப்பு விருந்தினராக புன்னாலைக்கட்டுவான் தெற்கு ஜே/207 கிராம உத்தியோகத்தர் பே.மயூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

* * * * * * * * * * * * * * * * * * * * * *

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடா ந்த விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் விநாயகர் சன சமூக நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக கைதடி விக்னேஸ்வரா வித்தி யாலய அதிபர் நா.கருணாக ரன் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் சி.பத்மநாதன், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் வீ.சிவசுப்பிரமணியம், ஜே/292 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.நஜீவா மற்றும் கைதடி முன்பள்ளி இணைப்பாளர் சு.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய சுகாதார நல கண்காட்சி


(யாழ்ப்பாணம்)

மத்திய சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய சுகாதார நல கண்காட்சி எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கண்காட்சியானது, பொதுமக்களுக்கு சுகாதாரம் தொடர்பில் அவசியமான விழிப்புணர்வுகள், உடல் நலம் தொடர்பில் முக்கியமாக அறிந்திருக்கக்கூடிய விளக்கங்கள் காட்சிகளின் மூலம் விளக்கப்படுத்தப்படவுள்ளதுடன், மேலும் நோய் தடுப்பு முறைகள் தொடர்பாகவும் மருத்துவ சேவையின் வளர்ச்சி,அவற்றின் சேவைகள் தொடர்பாகவும் மக்கள் அறிந்து கொள்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

இக்கண்காட்சியானது கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெற்றுள்ளதுடன் இரண்டாம் கட்டமாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பித்து 11 ஆம் திகதி வரை முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கலந்து கொள்ளவுள்ளார் என சுகாதார அமைச்சின் உதவிப் பொதுமுகாமையாளர் அமல் ஹர்ச டீ சில்வா தெரிவித்துள்ளார். (இ-7)




சமாதானத்துக்கான சர்வதேச இளைஞர்குழு தலைமையில் இன்றைய இளைஞர்களின் தலைமைத்துவத்தில் ஏற்படும் வழுக்கள் எனும் தலைப்பில் யாழ்.நகர் மைய றோட்டறிக்ட் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தமர்வின் போது...



கே.கமலேஸ்வரன் அன் கோ கணக்காய்வு அலுவலகத் திறப்பு விழா யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

## யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பரீட்சைகள் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாளை 7 ஆம் திகதி நடைபெறவிருந்த கலைப்பீட பரீட்சைகள் யாவும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தற்போது இடம்பெற்று வரும் காரணத்தினால் இப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாகவும், பரீட்சை இடம்பெறவுள்ள புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (இ-9)






கவிஞர் இரா.ஜெயக்குமாரின் "அநுபவங்களும் அநுமானங்களும்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இதில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.



சௌகரியமான வங்கியியல் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில், செலான் வங்கி, தனது யாழ்ப்பாணக் கிளையை, அதிகளவு இடவசதிகள் கொண்ட புதிய முகவரிக்கு இடம்மாற்றியுள்ளது. இல. 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள புதிய கிளையின் வைபவ ரீதியான அங்குரார்ப்பண நிகழ்வுகள் கடந்த மாதம் 6ஆம் திகதி நடைபெற்றது. செலான் வங்கியின் பணிப்பாளர் ப. ஆரியரட்ன மாற்றப்பட்ட கிளையை திறந்து வைத்தார்.


## நெற்காணி இடாப்பை பார்வையிடலாம்

(கரணவாய்)

கரவெட்டி கமநல சேவைகள் நிலைய அதிகாரப் பிரிவுக்குட்பட்ட நெற்காணி இடாப்பு (வரைவு) பின்வரும் கமக்காரர் அமைப்பு பிரிவுகளில் நிறைவடைந்து செல்வாதனால் (ஜே/362 கரணவாய் மத்தி, ஜே/358 இமையாணன், ஜே/367 கரவெட்டி மத்தி, ஜே/348 கரணவாய் தெற்கு, ஜே/371 துன்னாலை கிழக்கு, ஜே/366 மத்தொனி, ஜே/352 உடுப்பிட்டி மத்தி அவ்வமைப்புக்களில் உள்ள நெற்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் தமது வயல் காணிப்பதிவினை 07.03. 2018 தொடக்கம் 21.03.2018 இற்கு இடையில் பார்வை செய்து தங்கள் பதிவுகளைஉறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் அத்தோடு பதிவுகளை மேற்கொள்ளாத விவசாயிகள் மிக விரைவாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கமநல அபிவிருத்தி உத்தியோகர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-60)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஐ.நாவில் நீதி கோரியவர்களின் விசா மறுப்பு

## சுவிஸ் அரசு மீது குற்றச்சாட்டு




(ஜெனிவா)

இலங்கை அரசாங்கத்தால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் இனப் படுகொலைக்கு உள்ளான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழர் தாயக பகுதிகளில் தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இந்த நிலையில் தங்களுக்கு நீதி கோரி நேரடியாக ஐ.நா. மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடரில் பங்குபற்ற விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களின் விசாவிற்கு சுவிஸ் அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

எட்டுப்பேரில் இரண்டு பேருக்கு விசா கொடுக்கப்பட்ட நிலையில் ஏனைய ஆறுபேருக்கு சுவிஸ் அரசாங்கம் விசாவிற்கு அனுமதி கொடுக்கவில்லை.

இனப்படுகொலையை நியாயப்படுத்த இராணுவத்திற்கு அனுமதி கொடுக்கும் சுவிஸ் அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கருத்தை முன்வைக்க அனுமதி மறுத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களின் குரல்கள் நசுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஐ.நா. பக்க அரங்கில் வெளிப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-281)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567 1532

## மணமகள் தேவை

பிறப்பு-1984 இந்து, நட்சத்திரம்-ரோகினி 2 ஆம் பாதம், கி.பா-71 (8 இல் செவ்வாய்) (London PR), தகைமை-CIMA, உயரம்-5’4", எதிர்பார்ப்பு-வெள்ளை நிறமுடைய படித்த பெண்.

தொடர்பு-077 496 1923
077 698 1628

## ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்ட 51 பேரும் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

தம்புத்தேகம பொலிஸ் சந்தியில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 51 பேரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ராஜாங்கனை குளத்தை சுற்றி 17,000 ஏக்கர் விவசாய நிலம் உள்ளதாகவும் விவசாயத்திற்கு பயன்படுத்தும் ராஜாங்கனை குளத்தை குடிநீர் போத்தல்களை தயாரிக்கும் சீனத் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளதாகவும் கூறியே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்று அவர்கள் அனைவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் (இ-7)

### யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டத் திகதி மாற்றம்

*2018.03.25*ஆம் திகதி நடைபெறவிருந்த வருடாந்த பொதுக் கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தினால் *2018.04.01* ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

-செயலாளர்-

### NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 01.10.2016 முதல் 31.01.2017 வரை அடகு வைக்கப்பட்டு இன்று வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 17.03.2018 தொடக்கம் 25.03.2018 வரையான காலப்பகுதியில் அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

| | கிளை | பகிரங்க ஏலம் நடைபெறவுள்ள திகதி |
|---|---|---|
| 01. | சங்கானை | 17.03.2018 |
| 02. | யாழ்ப்பாணம் | |
| 03. | மானிப்பாய் | |
| 04. | திருநெல்வேலி | |
| 05 | மன்னார் | |
| 06 | வவுனியா | |
| 07 | காரைநகர் | 18.03.2018 |
| 08 | கிளிநொச்சி | |
| 09 | மல்லாவி | |
| 10 | சாவகச்சேரி | 24.03.2018 |
| 11 | ஊர்காவற்றுறை | |
| 12 | கோப்பாய் | |
| 13 | முல்லைத்தீவு | |
| 14 | நெல்லியடி | |
| 15 | பருத்தித்துறை | |
| 16 | வங்காலை | |
| 17 | அச்சுவேலி | 25.03.2018 |
| 18 | சுன்னாகம் | |
| 19 | யாழ்ப்பாணம் 2ஆம் கிளை | |
| 20 | கொடிகாமம் | |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு. (3124)

வடபிராந்திய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி.

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/7580 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 42 செவ் .4 இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/6764 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 31 செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc, MSc/ தனியார் தொழில்<br>தொ.இ: B/7581 | பிறப்பு: 1978 RC<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6771 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L/கடை<br>தொ.இ: B/7582 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ கணக்காளர் அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6774 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ வியாபாரம்<br>தொ.இ: B/7583 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 46<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/6775 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பில் 6,715 பேருக்கு சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்க வேண்டியுள்ளது

## முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு கரைதுரைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற ஆறாயிரத்து 715 பேருக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்க வேண்டிய தேவையிருப்பதாக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி ஜெயபவானி கனேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுரைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் 23 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்கின்ற மக்களுக்கு எந்த விதமான சமுர்த்திக்கொடுப்பனவுகளும் வழங்கப்படாதிருப்பதாகவும் இதனால் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பல குடும்பங்கள் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் கடந்த வாரம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் இவ்விடயம் தொடர்பில் விவா திக்கப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சமுர்த்தி ஆணையாளர், மாவட்டத்தில் 43 ஆயிரத்து 155 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 295 பேர் வாழ்கின்ற நிலையில் 11 ஆயிரத்து 258 குடும்பங்களுக்கு மட்டும் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர் புதக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 23 கிராமசேவையாளர் பிரிவுகள் இவ்வாறான சமுர்த்திக் கொடுப்பனவுகளுக்கு உள்வாங்கப்படவில்லை.

மேற்படி 23 கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஆறாயிரத்து 715 பேர் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

இவர்களுக்கு இந்த உதவித்திட்டங்கள் வழங்கப்படவேண்டும். இதற்காக தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், அமைச்சுக்களில் நடைபெறுகின்ற கலந்துரையாடல்களில் கலந்துரையாடல்கள் மற்றும் ஏனைய கலந்துரையாடல் என சகல இடங்களிலும் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (2-315)

# அனுமதி கிடைத்ததும் கடைகள் வழங்கப்படும்

## முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட மல்லாவிப் பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதிகள் வழங்குவது தொடர்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் கடைகளை வழங்க முடியுமென முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மல்லாவிப் பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள கடைத்தொகுதிகளை வர்த்தகர்களுக்கு வழங்குவதில் பிரதேச சபை தொடர்ந்து இழுத்தடித்து வருவதாக வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட மல்லாவிப் பொதுச் சந்தையில் கடந்த 2013 ஆம் ஆண்டு நவீன கடைத் தொகுதியொன்று அமைக்கப்பட்டு இதுவரை வர்த்தகர்களுக்கு வழங்கப்படாது மூடிய நிலையில் காணப்படுகின்றது. இதனைத் தமக்கு வழங்குமாறு வர்த்தகர்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை நிர்வாக வர்த்தகர்கள் ஆகியோர் இணைந்து பல கலந்துரையாடல்கள் நடத்தியபோதும் இதுவரை குறித்த கடைத்தொகுதிகள் வழங்கப்படவில்லை.

குறித்த கடைத் தொகுதிகளை வழங்குமாறு கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இக்கடைகள் வழங்கப்படாமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு குறித்த கடைகளை வழங்குவது தொடர்பில் கடிதம் அனுப்பியிருக்கின்றோம்.

அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அனுமதி கிடைத்தவுடன் கடைகளை வழங்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.(2-315)

# கமக்கார அமைப்புகளுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவிற்கான காலநேர அட்டவணையும்

## துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புகளுக்கான வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ள காலநேர அட்டவணையை துணுக்காய் கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடப்பாண்டுக்குரிய கமக்கார அமைப்புக்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளதால் விவசாயிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன், தங்கள் பகுதியில் நடைபெற்று வரும் நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகள் தொடர்பாகவும் மற்றும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய நீர்ப்பாசனக் கால்வாய்கள் உட்பட விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறாக ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பிலும் கருத்துக்களை முன்வைக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந் நிலையில், அறிவிக்கப்பட்டுள்ள காலநேர அட்டவணைக்கு அமைய அந்தந்த பகுதி கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட பொது நோக்கு மண்டபங்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30, மணிக்கு யோகபுரம் மத்தி கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும், முற்பகல் 10.30 மணிக்கு ஆலங்குளம் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு உயிலங்குளம் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும், முற்பகல் 10.30 மணிக்கு தேறாங்கண்டல் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாவி கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் முற்பகல் 10.30 மணிக்கு கல்விளான் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவ சாயிகளுக்கும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அம்பல பெருமாள் குளம் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும், முற்பகல் 10.30 மணிக்கு கோட்டைகட்டிய குளம் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் நடைபெறவுள்ளது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பழைய முறிகண்டி மற்றும் புத்துவெட்டுவான் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும், முற்பகல் 10.30 மணிக்கு ஐயங்கன்குளம் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யோகபுரம் கிழக்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும், முற்பகல் 10.30 மணிக்கு புகழேந்தி நகர் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும்நடைபெறவுள்ளது.

இறுதியாக எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருநகர் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார். (2-15)




# முல்லைத்தீவில்

# காணாமற்போனோரின் உறவுகளின் போராட்டம் சர்வதேச மகளிர் தினத்தன்று ஓராண்டு பூர்த்தி

## கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு அழைப்பு

(பனிக்கன்குளம்)

சர்வதேச மகளிர் தினத்தன்று முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பாரிய கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மேற்கொண்டுவரும் போராட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி ஓராண்டு நிறைவில் கால் பதிக்கவுள்ளது.

கடந்த ஓராண்டாக மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஓராண்டை நிறைவுக்குக் கொண்டுவரும் வேளையில் இதுவரையும் அரச பிரதிநிதிகளிடமும், அரசாங்கத்திடமும் எடுத்துக் காட்டி எந்த தீர்வுகளும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் எங்களின் பிரச்சினையை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட் டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் கூட்டத்திலும் காணாமல் போனவர்களின் விடயங்கள் சாட்சியங்களா கப் போக வேண்டும் என்ற நிலை இன்று காணப்படு கின்றது.

இந் நிலையில் ஓராண்டை எட்டவுள்ள எமது போராட்டத்தை சர்வதேசம் மற்றும் அரச பிரதிநிதிகள் திரும்பிப் பார்க்க வேண்டும். ஒரே தீர்வு நேரடியாக எங்களுக்குத் தர வேண்டும் என்று எதிர்பார்க்கும் நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி போராட்டம் ஒன்றிற்கு அறைகூவல் விடுக்கின்றோம்.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள், வர்த்தக சங்கங்கள், நலன் விரும்பிகள், பொது அமைப்புக்கள், மத குருமார்கள் என அனைத்து உறவுகளும் வந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆகிய எங்களின் பிரச்சினையை உலகிற்கு எடுத்துரைக்க அனைவரையும் அழைக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான எங்களின் போராட்டம் உலகிற்கு எடுத்துரைக்கப்பட வேண்டும். சர்வதேசம் தான் எங்களுக்கான முடிவினை தர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள். (2-281)

# வவுனியா நகரசபை புனரமைப்புப்பணி 3 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா நகரசபையின் புனரமைப்புப்பணிகள் இடம்பெற்று வருகின்றன. இம்முறை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா நகர சபைக்கு போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டுள்ள 21 நகர சபை உறுப்பினர்களை வரவேற்பதற்கு நகரசபையில் புனரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக 3மில்லியன் ரூபா செலவாகியுள்ளதாக நகர சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். நீண்டகாலமாக சபை இடம்பெறவில்லை. இதன் காரணமாக எவ்வித புனரமைப்புப் பணிகளும் இடம்பெறவில்லை. தற்போது அதி நவீன முறையில் புனரமைப்புப்பணிகள் இடம் பெற்று வருகின்றன. சபையின் புனரமைப்புப் பணிகளுக்காக நவீன மலசலகூடம் உட்பட இரண்டு மில்லியன் ரூபாய்களும் பொருட்கள் மற்றும் தளபாடம், நவீன தொடர்பாடல் கருவி என்பன ஒரு மில்லியன் ரூபாவிற்கும் கொள்முதல் செய்யப்பட்டு மொத்தமாக மூன்று மில்லியன் ரூபாவில் தற்போது நவீன முறையில் நகரசபை புனரமைப்புப்பணிகள் இடம் பெற்று வருகின்றன. 21 நகர சபை உறுப்பினர் களையும் வரவேற்பதற்கு நகரசபை தயாராகி வருவதாகவும் நகரசபைச் செயலாளர் ஆர்.தயாபரன் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)



# கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்கள் பிரதான வாயிலை மூடி கண்டனப் போராட்டம்







(பரந்தன்)

கிளிநொச்சி பொதுச் சந்தையின் மரக்கறி வர்த்தகர் ஒருவரை கத்தியால் வெட்டி படுகாயம் ஏற்படுத்திய சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சந்தை வர்த்தகர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்

கடந்த 3 ஆம் திகதி கிளிநொச்சி பொதுச் சந்தையில் மரக்கறி வர்த்தகர் ஒருவரை கத்தியால் வெட்டி படுகாயம் ஏற்படுத்திய சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் பிரதான வாயிலை மூடி காலை முதல் ஒன்பது மணி வரை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

"கத்திவெட்டு எம் கலாசாரத்தை சீரழிக்கும், சந்தையின் பாதுகாப்பு யார் கையில், தனிநபர் வாள் வெட்டு தமிழின சாபக்கேடு, வயிற்றுப் பசியைத் தீர்க்க வந்த நாம் வாள்வெட்டுக்கு இரையாவதா?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைககளையும் தம்முடன் ஏந்தியிருந்தனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு வருகைதந்த கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதன்,

பூட்டியிருந்த சந்தையின் கதவுகளைத் திறந்து உற்பத்தியாளர்களை உள்ளே செல்வதற்கு அனுமதித்தார்.

ஆனாலும் முன்னறிவித் தலின்றி சந்தை வர்த்தகர்கள் சந்தையைப் பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையானது தொலைவில் இருந்து தங்களின் உற்பத்திப் பொருட்களுடன் சந்தைக்கு வந்த உற்பத்தியாளர்களை பெரிதும் பாதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-312-315)

## கணனி பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்



(பனிக்கன்குளம்)

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அளவக்கை கிராமத்தில் "நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின்" ஏற்பாட்டில் கடந்த 3 மாதங்கள் இடம் பெற்ற இலவச கணனி பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அளவக்கை ஆலயத்தில் இடம்பெற்றது.

நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் நிர்வாக அலுவலகர் கே.பவமொழி பவன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் அளவக்கை பங்குத்தந்தை சுரேந்திரன் றெவல், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், சமூக சேவையாளரும்,சமாதான நீதவானுமாகிய என்.கணேசலிங்கம், கணனி ஆசிரியர் தயாபரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 3 மாத கால கணனி பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த 16 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் கிராம மக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)




# நெல் உலரவிடும் தளங்களை விவசாயிகள் பயன்படுத்துவதில்லை

## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

விவசாயிகளின் தேவை கருதி அமைக்கப்பட்ட நெல் உலர விடும் தளங்களை விவசாயிகள் பலர் அதனைப் பயன்படுத்தாது வீதிகளில் நெல்லை உலர விட்டு வருகின்றனர் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லை போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வீதிகளில் விவசாயிகள் உலர விட்டு வருகின்றனர்.

இதனால் பல விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாகவும் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட சில இடங்களில் நெல் உலர விடுவதற்கான தளங்கள் இன்றிக் காணப்படுவதனால் இவ்வாறு வீதிகளில் நெல்லை உலர வைக்க வேண்டிய நிலையிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், மீள்குடியேற்றத்தின் பின்னர் விவசாயிகளின் தேவைகருதி பல்வேறு திட்டங்கள் ஊடாக நெல் உலரவிடும்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக துணுக்காய், கல்விளான் ஆகிய பகுதிகளில் நெல் உலர விடும் தளங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்ற போதும், தளத்தினைப்பயன்படுத்தாது அதற்கருகில் வீதிகளில் நெல்லை உலர விடுகின்றனர். பல இடங்களில் இவ்வாறு பல தளங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளபோதும் விவசாயிகள் அதனை பயன்படுத்துவதில்லை. ஒவ்வொரு கிராமத்தின் தேவை கருதியும் அமைத்துக் கொடுக்கப்படுகின்ற நெல் உலர விடும் தளங்கள் மற்றும் ஏனைய கட்டுமானங்களை அந்த மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## திறப்புவிழாவிற்கு காத்திருக்கின்றது கிளி.நீரியல்வளத் திணைக்களக் கட்டடம்



(பரந்தன்)

கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம் மாவட்ட அலுவலகம் அமைக்கப்பட்டு வருடங்கள் சில கடந்தும் இதுவரை திறக்கப்படவில்லை எனகடற்றொழிலாளர்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

பல மில்லயன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குறித்த மாவட்ட அலுவலகம் அமைக்கப்பட்டு இன்னும் திறக்கப்படவில்லை. கட்டுமானப்பணிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையிலும் இதுவரை திறக்கப்பட்டு மக்களுக்கு திருப்தியான சேவையை வழங்குவதற்குரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மேற்கொள்ளவில்லையென பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே விரைவாக குறித்த திணைக்கள கட்டடத்தை திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-312-281)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# இவ்வாண்டு 173 மில்லியன் ரூபா செலவில் விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

## பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு 173 மில்லியன் ரூபா செலவில் விவசாய அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்க இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விவசாய மாவட்டங்களில் ஒன்றான முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 67 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவை 31.29 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

இதேபோல மாகாண சபை உறுப்பினர்களுடைய பிரமாண அடிப்படையிலான நிதியொதுக்கீடுகளின் கீழ் ஐந்து இலட்சம் ரூபா செலவிலும் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியின் கீழ் அலுவலகத் தேவைக்காக 0.65 மில்லியன் ரூபாவும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஊடாக 3.937 மில்லியன் ரூபாவும் விவசாயத்தை நவீனமயப்படுத்துகின்ற செயற்றிட்டத்தின் கீழ் 123.107 மில்லியன் ரூபாவும் வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு உணவு விவசாய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் 13.4575 மில்லியன் ரூபாவும் என மேற்படி அபிவிருத்தித் திட்டங்கள் 173 மில்லியன் ரூபா செலவில் இவ்வாண்டில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## விடுதி கட்டடத்தொகுதி திறப்பு விழாவும் வைத்தியசாலையை தரமுயர்த்தல் நிகழ்வும்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சத்திரசிகிச்சை விடுதி, வைத்தியர்கள் விடுதி ஆகியவற்றின் கட்டடத்தொகுதிகள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத் தொகுதிகளின் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையானது ஆதார வைத்திசாலையாக தரமுயர்த்தும் நிகழ்வும் அன்றைய தினம் இடம் பெறும். இந்நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் பங்கேற்கவுள்ளார். (2)

# இலங்கையை சர்வதேச நீதிமன்று வரை கொண்டுசெல்ல ஆட்சியாளர்கள் சதி

## -பதறுகிறார் குணதாச அமரசேகர-



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணாமற்போனோர் அலுவலகத்திற்கு சுயாதீனமாக செயற்படக்கூடிய உறுப்பினர்களை நியமிக்கத் தவறி விட்டார். தற்போது நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு ஆதரவு அளித்து அவர்களது கட்டளைகளை நிறைவேற்றுபவர்களே காணாமல்போனோர் அலுவலகத்திற்கு ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த கால அரசாங்கத்திற்கு பாதகமாகவும், நல்லாட்சி அரசாங்கத்திற்கும் புலம்பெயர் தமிழர்களுக்கு சாதகமாகவும் தமது விசாரணைகளை மேற்கொள்வார்கள் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர். குணதாச அமரசேகர எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற மேற்குலக நாடுகளின் விருப்பங்களை ஜனாதிபதி காணாமல் போனோர் அலுவலக விவகாரத்தில் நிறைவேற்றியுள்ளார். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் மாத்திரம் கிடையாது. சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மேற்குலக நாடுகள் யுத்த விவகாரத்தில் தமிழ் மக்களுக்கு சாதகமாகவே இன்றுவரை இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன.

இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன் பலர் காணாமல் போயுள்ளனர் என்ற விடயம் ஏற்றுக் கொள்ள கூடியதாகவே காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அதற்காக நாட்டை ஒருபொழுதும் காட்டிக் கொடுக்கவும் விட்டுக்கொடுக்கவும் முடியாது.

மேற்குலக நாடுகளின் விருப்பங்களுக்கு அமையவே தேசிய அரசாங்கம் நாட்டின் நிர்வாகத்தினை மேற்கொண்டு வருகின்றது. ஐ.நா. மனித உரிமையின் ஆணையாளரின் இலங்கைக்கு எதிரான அதிருப்தியின் பின்னரே காணாமல் போனோர் அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் குறித்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மந்தகரமாகவே காணப்பட்டது. நியமிக்கப்பட்டுள்ளவர்கள் ஒரு போதும் சுயாதீனமாக செயற்படமாட்டார்கள்.

இவர்கள் புலம்பெயர் தமிழர்களின் விருப்பங்களுக்கு அமையவே தமது விசாரணைகளை மேற் கொள்வார்கள். அலுவலகத்தின் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விசாரணைகள் முழுமை பெற வேண்டும் என்ற கட்டாயம் காணப்படுவதன் காரணமாக இவர்கள் பொய்யான விசாரணைகளையும், சாட்சியங்களையும் உருவாக்க முடியும்.

இறுதி விசாரணை அறிக்கையினை இவர்கள் மேற்குலகத்தவறின் விருப்பங்களுக்கு அமையவே உருவாக்கி சர்வதேச மட்டத்தில் இலங்கையினை காட்டிக் கொடுத்து நாட்டை சர்வதேச நீதிமன்றம் வரை கொண்டு செல்வார்கள் என்பதை நல்லாட்சியின் தலைவர் மறந்து விடக் கூடாது என தெரிவித்தார். (இ-7)

# துரைவி விருது வழங்கல்



(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற துரைவி விருது வழங்கும் விழாவில் கவிஞர் சோ.பத்மநாதன் தமது தென்னாசியக் கவிதைகள் (மொழி பெயர்ப்பு) நூலுக்கான விருதை புரவலர் ஹாசிம் உமரிடம் பெற்றுக் கொண்டார். (இ-7)

# ஜனாதிபதியின் அறிவிப்பால் மட்டு. பட்டதாரிகள் மகிழ்ச்சி



(ஏறாவூர்)

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜனாதிபதியிடம் வேலையற்ற பட்டதாரிகளால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி கூட்டத்தின் போது, மகஜரில் குறிப்பிட்ட விடயங்களுக்கு தீர்வினை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் காந்தி பூங்காவில் கூடிய பட்டதாரிகள் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஒட்டுமொத்த பட்டதாரிகளுக்கும் ஜனாதிபதி நல்ல முடிவினை அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இது பட்டதாரிகளின் போராட்டத்திற்கு கிடைத்தவெற்றி என்றும் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவகாந்தன் கூறியுள்ளார். (இ-7)

# இரண்டாம் கட்ட அமைச்சரவை மாற்றம் இன்னும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்னும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை எனக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் சந்தித்த தோல்வியின் பின்னர் அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்வதாகத் தேசிய அரசாங்கம் அறிவித்தது.

இதற்கமைய முதலாம் கட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் மாத்திரம் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.


அத்துடன் இரண்டு வாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சரவை மாற்றம் இடம்பெறுள்ளதாக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டது.

எனினும், இந்த இரண்டாம் கட்ட அமைச்சரவை மாற்றம் தொடர்பாக உறுதியான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சரவை மாற்றத்துக்காக முழுமையான இணக்கப்பாடு இன்னும் எட்டப்படவில்லை எனக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் அதிருப்தி வெளியிடப்பட்டு வருகின்றது. இந்த அமைச்சரவை மாற்றத்துக்கு ஐ.தே.கவின் முக்கிய உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதேவேளை, அமைச்சரவை மாற்றத்தால், தமது கட்சிக்கும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க சுதந்திரக் கட்சித் தலைமை உட்பட அதன் உயர்மட்ட பிரமுகர்கள் ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாகவும் அறிய முடிகின்றது. (இ-7)

# தொலைத் தொடர்பு கோபுரத்தில் திடீர் தீ



(கொழும்பு)

பொல்கஹவெல - யோகமுவகந்தயில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் திடீரென தீ பரவியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட இந்தத் தீப்பரவலை பொலிஸார் பிரதேசவாசிகள் மற்றும் குருநாகல் நகர சபை தீயணைப்புப் பிரிவினர் இணைந்து அணைத்துள்ளனர்.

மின்னல் தாக்கத்தால் இந்த தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-7)

# அரசியல்வாதிகள் தேடிக் கொள்ளும் ஆயுதம் தான் இனவாதம்-அமீர் அலி



(கொழும்பு)

சமூகத்திலே முன்னேற முடியாது என்ற காரணத்தால் அரசியல்வாதிகள் தேடிக் கொள்ளும் ஆயுதம் தான் இனவாதம் என கிராமிய பொருளாதார பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி - ஒந்தாச்சிமடம் பிரதேசத்தில் சுதந்திர வலது குறைந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இனவாதம் ஒரு நாளும் சோறு போடாது, இனவாதம் பேசி அரசியல் செய்பவர்களாக இருந்தாலும் சரி, இனவாதம் பேசி வியாபாரம் செய்பவர்களாக இருந்தாலும் எதிர்காலத்தில் இந்த நாட்டில் அரசியலில் நிலைபேறாக இருக்க முடியாது.

கடந்த கால அரசியல் முடிவுகளில் இதனை நாங்கள் தெளிவாக பார்த்து வருகின்றோம். அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெளிவாக பார்த்து வருகின்றோம். சமூகத்திலே முன்னேற முடியாது என்ற காரணத்திற்காக தேடிக் கொள்ளும் ஆயுதம் தான் இனவாதம். இவர்களது அடிப்படையிலே ஏதோவொரு பிழை இருக்கின்றது. பிழை இருக்குமாக இருந்தால் மட்டக்களப்பு மாவட்டம் இப்படித்தான் இருக்கும். இதை விட மோசமாகத்தான் போகவுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கண்டி தெல்தெனியவுக்கு அதிரடிப்படை பாதுகாப்பு



(கொழும்பு)

கண்டி-தெல்தெனிய நகரத்தில், விசேட அதிரடிப் படையினர் (எஸ்.ரி.எப்) பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இரு குழுக்களுக்கிடையில், கடந்த 10 நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற கைகலப்பு சம்பவத்தில் காயமடைந்த நபர், கடந்த 3ஆம் திகதி இரவு உயிரிழந்தார்.

இதனையடுத்து, தெல்தெனிய நகரிலுள்ள சில கடைகள் நேற்று முன்தினம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. அத்துடன் வாகனங்கள் சிலவற்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரையிலும் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# யாழ்ப்பாணத்துப் பண்பாடு ஒரு மரபான நிலைப்பாடு

பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல் என நமது முன்னோர் கூறியுள்ளனர். அந்த ஒழுக்க நடைமுறைகளே பண்பாடு எனப்பட்டன. யாழ்ப்பாணத்துப் பண்பாடு பற்றிய குறிப்புகள் இலக்கியங்களிலும் வரலாற்று ஆசிரியர் குறிப்புக்களிலும் நிர்வாக ஆவணங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்று யாழ்ப்பாணத்துப் பண்பாடு பற்றிய தேடலை மேற்கொள்வோர் இவற்றைப் பார்வையிடுவது இன்றியமையாதது. எமது அடுத்த தலைமுறையினரை அப்பணியிலே நாட்டங்கொள்ளச் செய்ய வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டின் தனித்துவத்தை அவர்கள் நன்குணர்ந்து தமது வாழ்வியலின் செல்நெறி யைத் திட்டமிட வாய்ப்பு அளிக்க வேண்டும். அந்த வகையில் சில குறிப்புகள் இங்கே இணைக்கப் பட்டுள்ளன.

தமிழர் பண்பாடு உணவு, உடை, உறையுள் என்ற மனித வாழ்வின் இன்றியமையாத தேவைகளின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டது. அவை மேலும் வீடு, சமூகம், நாடு என மூன்று தளங்களின் நிலைக்கேற்ப கட்டமைக்கப்பட்டுள்ளன. தமிழர் பண்பாடு என்ற பரந்த பண்பாட்டுக் கோலத்தில் தொடர்பாடல் என்ற நிலையில் மொழியும் நடை முறைகள், நம்பிக்கைகள் என்ற வகையில் வழிபாடும் இணைந்து அணி செய்கின்றன.

இவற்றின் இறுக்கமான செயற்பாடே தமிழர் பண்பாட்டு மரபு எனப் பேணப்பட்டு வருகின்றது. தமிழர் பண்பாடு பிற பண்பாட்டுச் செல் வாக்கால் பல்வேறு கலப்பு நடை முறைகளையும் காலத்துக்குக் காலம் இணைத்துக்கொள்ள நேரிட்டது. அதனால் தமிழர் பண்பாட்டு நடை முறைகளில் மரபு பேணும் நிலை யும் தளர்வடைந்தது. மனித வாழ் வியலின் செல்நெறியும் கட்டுக் குலைந்தது.

பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படாமல் அழிந்தன. எனவே அவற்றை மீளப் பேணுவதன் மூலமாகவே மனித விழுமியப் பண்புகளை நிலைப்பெறச் செய்யலாம்.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டை மீள்கட்டுமானம் செய்ய வேண்டிய சூழல் தற்போது உருவாகியுள்ளது. பிற பண்பாட்டுச் செல்வாக்குகளாலும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியாலும் பொறிமுறைக் கையாட்சியாலும் மரபான பண்பாடு பெரிதும் மாற்றமடைய நேரிட்டது. நாளாந்த வாழ்வியல் நடைமுறைகள் விரைவாக மாற்றமடைந்தன. அந்த மாற்றம் உடல் நலத்தையும் உள் நலத்தையும் சீர்குலைத்தது. அதனால் யாழ்ப்பாணத்தின் மரபான பண்பாட்டை மீண்டும் பேணுவதன் மூலம் இவ்விடர்பாட்டை நீக்கப் பல முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.



குறிப்பாக யாழ்ப்பாணத்து உணவு, உடை, உறையுள் என்னும் மூன்றிலும் மரபான பண்பாட்டு நடைமுறைகளை மீளப் பயிற்றுவதற்குரிய திட்டமிடல் செய்ய வேண்டியுள்ளது. பண்டைய மரபான உணவுப் பழக்க வழக்கங்களைப் பற்றிய அறிவூட்டலும் செயற்பாடும் நடைபெறுவதற்குரிய திட்டமிடல் மேற்கொள்ளப்படவேண்டும்.

மரபான உணவு, உடை, உறையுள் என்பவற்றின் விளக்கங்களை மக்களிடையே பரவச் செய்யப் புதிய கற்கைநெறிகள் தேவைப்படுகின்றன. அவற்றின் பயன்பாடு பற்றிய பல்லூடகப் பணிகள் இணைக்கப்பட வேண்டும்.

மொழிபற்றிய விழிப்புணர்வு விளக்கம் பெற வேண்டிப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நடைமுறைகள், நம்பிக்கைகள் பற்றிய விளக்கமும் பயனும் அறிவுறுத்தப்பட வேண்டும். மரபான புழங்கு பொருட்களை மீண்டும் மக்கள் பயன்படுத்த ஊக்கமளிக்க வேண்டும்.

இம்மரபான பண்பாடு வீடு, சமூகம், நாடு என்ற மூன்று தளங்களிலும் எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதைக் காலவரையான செயற்பாட்டுத் திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும். யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுப் பேணலை எல்லோருடைய கடமையாகச் செய்யும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இன்று வீடு, பாடசாலை, பல்கலைக்கழகம், பணிமனைகள், பொது இடங்கள் என எல்லாவிடங்களிலும் இப்பணி மேற்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.

இன்றைய இளந்தலைமுறையினர் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டின் இயற்கையோடு இணைந்து கட்டமைப்பை நன்குணர வேண்டும். பருவகாலங்களோடு இணைந்த பண்பாடாக அது பேணப்பட்டதை அவர்கள் அறிய வேண்டும். அதைப் பேணி நடைமுறைப்படுத்தும் பணி எம்முடையது என்பதை அவர்கள் உணர்ந்து செயற்பட நாம் ஏற்ற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பேராசிரியர்
மனோன்மணி சண்முகதாஸ்

மருத்துவ உலகம்

## நீரிழிவு நோயாளர்கள் சிவப்பு கொய்யாவை உண்பதன் மூலம் ஏராளம் நன்மைகள்



கொய்யாப் பழங்களில் சிவப்பு கொய்யா மிகவும் சுவையானது. நீரழிவு நோயாளிகள் சிவப்புக் கொய்யாவை சாப்பிடுவது நல்லதா? என்பது குறித்து பார்க்கலாம்.

பழ வகைகளில் ஒவ்வொரு பழத்தின் நிறத்திற்கு ஏற்ப அவற்றின் குணநலன்கள் மாறுபடும். ஏனெனில் பழத்தில் இருக்கக்கூடிய தாதுக்கள், சத்துக்கள், ஃபைட்டோ கெமிக்கல்கள் ஆகியவற்றினால் பழங்களின் நிறம் வேறுபடுகிறது.

அதுவும் கொய்யாப் பழங்களில் சிவப்புக் கொய்யா மிகவும் சுவையானது. குறைவான கலோரி, அதிக நார்ச்சத்து கொண்டது. இதில் கரோடினாய்டு, விற்றமின் ஏ.சி, பி3, பி6, பி9, ஃபைபர், பொட்டசியம், ஃபோலேட் ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன.

சிவப்புக் கொய்யாப் பழத்தில் உள்ள சத்துக்கள் நம்முடைய செல் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி, மார்பக புற்றுநோய் போன்ற பல புற்று நோய்கள் வராமல் தடுக்கிறது. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்து, உயர் இரத்த அழுத் தத்தைக் குறைக்க உதவுகிறது.

நம் உடலில் உள்ள கெட்ட கொழுப்பினை நீக்கி, இதயம் தொடர்பான பிரச்சினைகள் வராமல் தடுக்கிறது. கர்ப்பிணிகளுக்கு தேவையான விற்றமின் பி9 சிவப்புக்கொய்யாவில் உள்ளது. எனவே கர்ப்பிணிகள் சாப்பிட்டால் குழந்தை கருவில் உருவாகும் போது ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்கலாம்.


சிவப்புக் கொய்யாவில் விற்றமின் பி3 மற்றும் விற்றமின் பி6 மூளையின் இரத்த ஓட்டத்தை அதிகரித்து, தலைவலி, மன அழுத்தம் போன்றவை வராமல் தடுக்கிறது. இரும்புச்சத்து அதிகம் கொண்ட சிவப்புக் கொய்யாவை சாப்பிடுவதால், நம் உடலில் நோயெதிர்ப்பு சக்தி அதிகரித்து, வைரஸ் தொற்றுகளினால் ஏற்படக்கூடிய காய்ச்சல், இருமல், சளி ஆகிய பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம்.

சிவப்புக் கொய்யாவில் அதிகப் படியான நார்ச்சத்துக்கள் மற்றும் குறைந்த க்ளைசமிக் இண்டெக்ஸ்



ஆகியவை இருக்கிறது. எனவே இந்த சிவப்புக் கொய்யாவை சாப்பிடுவதால் நம் இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிப்பதை தவிர்க்கலாம். அதனால் நீரிழிவு நோயாளிகள் தயங்காமல் சிவப்புக் கொய்யாவை சாப்பிடலாம்.

## சிறுநீரகக் கற்களை கரைக்கும் மரக்கறி வகைகள் ஒருநோக்கு




சிறுநீரகக் கல் பிரச்சினை சிலரை பாடாய்ப்படுத்தும். ஆனால் சில காய்கறிகளைச் சாப்பிடுவதன் மூலம் இயற்கையாகவே சிறுநீரகக் கற்களைக் கரைக்கலாம்.

அந்தக் காய்கறிகள் பற்றி...

கரட், பாகற்காயில் உள்ள பொட்டாசியம், மக்னீசியம் ஆகியவை சிறுநீரகக் கற்களைப் படியவிடாமல் தடுத்து, அவற்றைக் கரைக்கவும் உதவுகின்றன.

வாழைப்பழம், எலுமிச்சம்பழத்தில் உள்ள விற்றமின் பி6, சிட்ரேட் ஆகிய சத்துகள், சிறுநீரகக் கற்களின் ஆக்சலேட் என்ற வேதிப் பொருளுடன் சேர்ந்து அதைச் சிதைத்து, படியவிடாமல் தடுக்கின்றன. சிறுநீரகக் கற்கள் உருவாகாமலும் தடை போடுகின்றன.

அன்னாசிப் பழத்தில் சிறுநீரகக் கற்களின் 'மைப்ரினை' சிதைக்கும் நொதிகள் உள்ளன. எனவே இப் பழம் எளிதில் சிறுநீரகக் கற்களைக் கரைக்கும்.

கொள்ளு, பாதாம்பருப்பு, பார்லி, ஓட்ஸ் போன்றவையும் சிறுநீரகக் கற்கள் வராமல் தடுக்கும்.

சிறுநீரகக் கல் பிரச்சினை உள்ளவர்கள் தினமும் இளநீர் குடிக்க வேண்டும். அதோடு, சிட்ரஸ் பழச்சாறுகள், வாழைத்தண்டுச் சாறு போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சிறுநீரகக் கல்லால் தவிப்பவர்கள் பாஸ்பேட் மிகுந்த கோபி, டீ, பிளாக் டீ, சோடா, செயற்கை குளிர்பானங்கள், ஐஸ்கிரீம், சொக்லேட் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். அன்றாடம் சாப்பிடும் உணவில் உப்பு, புளி, காரம், மசாலா ஆகிய வற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

# பாரதம்

## 'பிடர் கொண்ட சிங்கமே பேசு'
# கருணாநிதியை சந்தித்த வைரமுத்து உருக்கம்



(சென்னை)

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியை சந்தித்த கவிஞர் வைரமுத்து 'பிடர் கொண்ட சிங்கமே பேசு' என்னும் கவிதையை அவருக்கு பரிசளித்துள்ளார்.

கோபாலபுர இல்லத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

"பிடர் கொண்ட சிங்கமே பேசு" எனும் கவிதையை கவிஞர் வாசிக்கும் போதெல்லாம், சில வரிகளின் போது கருணாநிதி புன்னகைப்பதும், நிமிர்ந்தெழுந்திருப்பதுமாக இருந்தார்.

குறித்த கவிதையானது "பிடர் கொண்ட சிங்கமே பேசு... இடர்கொண்ட தமிழர் நாட்டின் இன்னல்கள் தீருதற்கும் படர்கின்ற பழைமைவாதம் பசையற்று போவதற்கும், சுடர்கொண்ட தமிழைக் கொண்டு சூள்கொண்ட கருத்துரைக்க... பிடர் கொண்ட சிங்கமே நீ பேசுவாய் வாய் திறந்து...

யாதொன்றும் கேட்க மாட்டேன்.. யாழிசை கேட்க மாட்டேன்... வேதங்கள் கேட்க மாட்டேன்.. வேய்ங்குழல் கேட்க மாட்டேன்... தீதொன்று தமிழுக்கென்றால் தீக்கனல் போலெழும்பும் கோதற்ற கலைஞரே... நின் குரல் மட்டும் கேட்க வேண்டும்" என அமையப்பெற்றுள்ளது.

கவிதையை எழுதி கருணாநிதி கைகளில் பரிசளித்த வைரமுத்து, அதை வாசித்தும் கலைஞர் கருணாநிதியை மகிழ்வித்தார். (இ-10)

# ராஜீவ் காந்தி கொலை; ரவிச்சந்திரனுக்கு பரோல்



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 25 வருடங்களாக சிறைவைக்கப்பட்டிருந்த ரவிச்சந்திரன் பரோலில் வெளியில் வந்துள்ளார்.

இவருக்கு 15 நாட்கள் நிபந்தனைகளுடன் கூடிய பரோல் விடுவிப்பினை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கியுள்ளது. இதனடிப்படையில் ரவிச்சந்திரன் நேற்று திங்கட்கிழமை வெளியில் வந்துள்ளார்.

பரோலில் வெளியில் வந்த ரவிச்சந்திரன், தனது சொந்த ஊரான அருப்புக்கோட்டிற்குச் சென்றார்.

தன்து குடும்பத்தின் சொத்துக்களை பிரிப்பது தொடர்பாகவே தம்மை பரோலில் விடுவிக்குமாறு ரவிச்சந்திரன் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அதனடிப்படையில் அவரை பரோலில் விடுவித்துள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை, பரோலிலுள்ள காலப்பகுதியில் எந்த வகையான இலத்திரனியல் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தக் கூடாதென உத்தரவிட்டுள்ளது, அத்தோடு, ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கக் கூடாதென்றும் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## "சிரிய கொ...
# தீவிரவாதி... நகரங்களை...

(டமாஸ்கஸ்)

சிரியாவின் கவுட்டா பகுதியில் தீவிரவாதிகள் வசம் சிக்கியிருந்த நகரங்கள் மற்றும் விவசாயப் பண்ணைகளை கைப்பற்றியுள்ளதாக அந்நாட்டின் இராணுவம் அறிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி குழுவினர் ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அந்தப் பகுதிகளை மீட்கவும், தீவிரவாதிகளின் ஆயுதக் கிடங்குகள் மற்றும் பதுங்குமிடங்களை அழிக்கவும் ரஷ்ய நாட்டு படைகளின் துணையுடன் சிரியா இராணுவம் ஆவேச தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதற்கிடையில், உள்நாட்டுப் போர் உச்சக் கட்டத்தை எட்டியுள்ள சிரியாவில் காலை 9

# இலங்கைத் தமிழர் பிரச்சினையின் போது தி.மு.க.எம்.பிக்கள் ஏன் இராஜினாமா செய்யவில்லை
## ஜெயக்குமார் கேள்வி

(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்சினையின் போது தி.மு.க. எம்.பி.க்களை ஏன் இராஜினாமா செய்ய வைக்கவில்லை? என்று மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர் ஜெயக்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

அ.தி.மு.க அமைச்சர் ஜெயக்குமார் காவிமேலாண்மை வாரியம் அமைப்பது தொடர்பில் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவித்த போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் சுலபமாக சொல்லி விட்டு போய் விட்டார். மக்களவையில் தி.மு.க.வுக்கு ஒரு எம்.பி. கூட இல்லாத நிலையில் அ.தி.மு.கவை இராஜனாமா செய்ய சொல்வது சுலபம். இலங்கை தமிழர் பிரச்சினையின் போது தி.மு.க. எம்.பி.க்களை ஏன் இராஜினாமா செய்ய வைக்கவில்லை?

மு.க.ஸ்டாலின் உள்ளே ஒன்று பேசிவிட்டு வெளியே ஒன்று பேசுவது நாகரிகம் அல்ல. முதலில் நீர்வளத் துறை அமைச்சர் நிதின் கட்காரியை சந்தியுங்கள் என பிரதமர் அலுவலகம் கூறியது என்றுதான் நாங்கள் சொன்னோம். பிரதமர் சந்திக்க மறுப்பதாக நாங்கள் கூறாத வார்த்தையை மு.க. ஸ்டாலின் கூறுகிறார்.

ஆனால் நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். 17 வருடம் டில்லியில் மத்திய அரசுக்கு காவடி தூக்கி விட்டு தங்களின் குடும்பத்தை வளப் படுத்தும் இலாகாக்களை வாங்கி அதனால் வளம் பெற்றீர்கள்.

ஆனால் நமது ஜீவாதார பிரச்சினைகளில் ஒன்று காவிரி நீர் பிரச்சினை. 17 வருடத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள். காவிரி மேலாண்மை வாரியம் 6 வார காலத்திற்குள் அமைக்கப்பட வேண்டும். அதற்கு என்னென்ன அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றதோ அந்த அழுத்தம் கொடுத்து நமது உரிமைகளை காக்க அம்மாவின் அரசு தயாராக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# குவாத்தமாலா தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்ற முடிவு



(வோஷிங்டன்)

குவாத்தமாலாவின் இஸ்ரேலுக்கான தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றவுள்ளதாக, குவாத்தமாலா ஜனாதிபதி ஜிம்மி மொரலஸ் தெரிவித்துள்ளார்.

'அமெரிக்கா - இஸ்ரேல் பொது விவகாரங்களுக்கான குழுவின் வருடாந்தக் கொள்கை மாநாடு' வோஷிங்டனில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் மே மாதம் முதல் குறித்த தூதரகத்தை மாற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"எமது ஆதரவையும் ஒற்றுமையையும் இஸ்ரேல் மக்களுக்கு உறுதிப்படுத்தும் வகையில், தற்போது டெல் அவிவ் நகரில் இயங்கிவரும் இஸ்ரேலுக்கான குவாத்தமாலாத் தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்ற நாம் தீர்மானித்துள்ளோம். இந்த நடவடிக்கைக்கு தலைமை தாங்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு நாம் நன்றி தெரிவிப்பதுடன், அவரது தைரியம் சரியானதைச் செய்ய எம்மை ஊக்குவிக்கின்றது.

இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தை எதிர்வரும் மே மாதம் 14ஆம் திகதி ஜெருசலேமுக்கு மாற்றவுள்ளதாக, அமெரிக்கா அறிவித்தைத் தொடர்ந்து, இஸ்ரேலுக்கான குவாத்தமாலா தூதரகத்தை குவாத்தமாலாவும் மாற்றவுள்ளதாக அறிவித்துள்ளது. யூதர், கிறிஸ்தவர் மற்றும் முஸ்லிம்கள் புனித நகராகக்கொள்ளும் ஜெருசலேமை, இஸ்ரேல் தமது தலைநகரெனவும் கிழக்கு ஜெருசலேம் தமது தலைநகரெனவும் பலஸ்தீனமும் கூறி வந்த நிலையில், கடந்த 2017ஆம் ஆண்டு டிசெம்பர் 6ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒருதலைப்பட்சமாக இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்தார். ட்ரம்பின் இந்தத் தீர்மானத்துக்கு மேற்கத்தேய நாடுகளும் அரபு நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்த அதேவேளை, குவாத்தமாலா அதற்கு ஆதரவளித்துள்ளது.

மேலும், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக, ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் 128 நாடுகள் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துருக்கியிலுள்ள அமெ. தூதரகம் பாதுகாப்பு அச்சுறுத்தலால் மூடல்

(அங்காரா)

துருக்கி தலைநகர் அங்காராவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளதாகவும் தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் எனவும் அதிகாரிகள் கூறினர்.


அமெரிக்க மக்கள் அதிகம் கூடுவதைத் தவிர்க்க வேண்டும், தூதரகத்தை சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் சுற்றுலாத் தளங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். பாதுகாப்பாக இருக்க வேண்டும் என அமெரிக்கா அறிவுரை கூறி தூதரகத்திற்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

துருக்கியிலுள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க உளவுத்துறைக்கு வந்த தகவலின் அடிப்படையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் தூதரகத்திற்கு பொதுமக்கள் வருவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. தூதரகம் திறக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தனர். சிரியாவில் தற்போது நடைபெற்று வரும் உக்கிரமான தாக்குதலை தொடர்ந்து துருக்கியில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (10)



# ஐ.நா.போர் ... கிழக்கு கௌ...
## சிரிய ஜனாதிபதி ...



(டமாஸ்கஸ்)

சிரியாவின் கிழக்கு கௌட்டாவில் மோதல் ...

# அமைதியான அபிவிருத்தி... அமெரிக்காவுடன் வர்த்த...

(பீஜிங்)

அமெரிக்காவுடன் வர்த்தகப் போரை சீனா விரும்பவில்லையென, சீனாவின் துணை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'பீஜிங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'அமெரிக்காவுடன் வர்த்தகப்போர் நடத்த சீனா விரும்பவில்லை. ஆனால், எமது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் நாம் செயற்படுவோம்' என்றார்.

'சீனா எப்போதும் அமைதியான அபிவிருத்திப் பாதையை உறுதிப்

படுத்தி... கொள்... படுத்தி... எ... வொரு... இருக்க... வத்தி... க்கு உ... அதே... கச் சீன... கள் ச... ன்றது... துள்ள... அ... ஆகிய... டுத்து...

# வெளிநாடு

## காடூரக் கொலைக் களத்தில்”
## ாதிகளின் பிடியிலிருந்த
## ளை மீட்டது இராணுவம்

மணியில் இருந்து பிற்பகல் 2 மணிவரை ஒரு மாதத்துக்கு இடைக்கால போர் நிறுத்தம் செய் யும் சமரசத்தை ரஷ்யா உருவாக்கித் தந்தது.

இந்த போர் நிறுத்த நேரம் தவிர மற்ற வேளைகளில் இருதரப்பினரும் சரமாரியான தாக்குதல்களில் ஈடு பட்டு வருகின்றனர். இந்நிலையில், கிழக்கு கவுட்டா பகுதியில் தீவிரவாதி களின் பிடியிலுள்ள பகுதி களை மீட்பதற்காக கடந்த இரு நாட்களாக அரசுப் படைகள் தாக்குதல் நடத்தி வந் தன. இதன் விளைவாக சில நகரங்களையும், விவசா



யப் பண்ணை நிலங்களையும் கைப்பற்றியுள்ளதாக சிரியா இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், அவர்களது தலைமையகங்கள் மற்றும் இரகசிய குகைகள் போன்றவை அழிக்கப்பட்டதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (10)

## சீன இராணுவ பட்ஜெட்டில் 175 மில்.டொலர் ஒதுக்கீடு



(பீஜிங்)

இராணுவ பலத்தை தொடர்ந்து அதிகரித்து வரும் சீனா, இந்த ஆண்டு தனது இராணுவ வரவு-செலவுத் திட்டத்தை 175 பில்லியன் டொலராக உயர்த்தியுள்ளது.

இராணுவத்திற்கு அதிக நிதி செலவு செய்து இராணுவத்தை நவீனப்படுத்தும் நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் சீனா உள்ளது. புதிய நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்க்கப்பல்கள் என தன் வலிமையை தொடர்ந்து அதிகரித்து வரும் சீனா, இதற்கான செலவினத்தை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு 150.5 பில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது முந்தைய ஆண்டைவிட 7 சதவீதம் அதிகரித்துள்ளது.


இந்த ஆண்டு தனது இராணுவ வரவு-செலவுத்திட்டத்தை மேலும் 8.1 சதவீதம் உயர்த்தியுள்ளது. தேசிய மக்கள் காங்கிரசில் (தேசிய சபை) தாக்கல் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு 175 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் இந்த வரவு-செலவுத் திட்டமானது இந்தியாவின் இராணுவ வரவு-செலவுத் திட்டத்தைவிட மூன்று மடங்கு அதிகம் ஆகும். இந்தியா இந்த ஆண்டு இராணுவத்துக்கு 52.5 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பிற பெரிய நாடுகளை ஒப்பிடுகையில், சீன அரசாங்கம் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தேசிய நிதிச் செலவில் இருந்து குறைந்த பங்கையே இராணுவ வரவு-செலவுத் திட்டத்திற்கு எடுத்து கொண்டிருப்பதாக தேசிய மக்கள் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

## ார் நிறுத்தத்தை தொடர்ந்தும்
## களட்டாவில் மோதல் தொடரும்

### பெதி திட்டவட்டம்



மோதல் தொடர்ந்து இடம்பெறுமென, சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் உறுதியளித்துள்ளார்.

டமாஸ்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு கௌட்டாவின் தற்போதைய நிலை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது, 'சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸுக்கு அருகிலுள்ள கிழக்கு கௌட்டாவை படையினர் நெருங்கியுள்ள நிலையில், படையினருக்கும் போராளிக் குழுவினருக்குமிடையிலான மோதல் தொடரும். மோதல் பகுதியிலுள்ள பொதுமக்கள் வெளியேற அனுமதிக்கப்படுவார்களென்பதுடன், அவர்களின் வெளியேற்றத்துக்கு நாம் உதவ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு கௌட்டாவில் கடந்த சில நாட்களாக மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், 30 நாட்கள் யுத்தநிறுத்தத்தை ஐ.நா.சபை அறிவித்த போதிலும் அங்கு தாக்குதல்கள் இடம்பெறுவதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கு கௌட்டாவில் சுமார் 4 இலட்சம் மக்கள் வசிக்கும் நிலையில் மோதல் காரணமாக ஆயிரக்கணக்கானோர் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (10)

## பாக்.நாடாளுமன்ற உறுப்பினராக தலித் இன இந்துப் பெண் நியமனம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வரலாற்றில் முதல்முறையாக தலித் இனத்தை சேர்ந்த இந்துப் பெண் ஒருவர் நாடாளுமன்ற மேல்-சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்ற மேல்-சபைக்கு தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி (நவாஸ்) 15 இடங்களில் வெற்றி பெற்றது.

சிந்து மாகாணத்தில் இருந்து மேல்-சபைக்கு போட்டியிட்ட இந்து தலித் இனப் பெண் கிருஷ்ணகுமாரி கோலி (வயது-39) வெற்றி பெற்றார். இதன்மூலம் பாகிஸ்தான் வரலாற்றில் நாடாளுமன்ற மேல்-சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள முதல்



தலித் இன இந்துப் பெண்ணாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சியாக உள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணகுமாரி கோலி, தார் பகுதியில் நங்கர்பார்க்கர் மாவட்டத்திலுள்ள சிறிய கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். ஏழை விவசாய குடும்பத்தின் மகளாக 1979 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் பிறந்தவர். இவர் சிந்து பல்கலைக்கழக முதுகலைப்பட்டதாரியென்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ிருத்திப் பாதையை உறுதிப்படுத்தும் சீனா
## வர்த்தகப் போர் செய்ய விரும்பவில்லை

படுத்தி வருவதுடன், பாதுகாப்புக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

எனவே, சீனாவின் வளர்ச்சி எந்தவொரு நாட்டுக்கும் அச்சுறுத்தலாக இருக்க முடியாது. எமது நாட்டு இராணுவத்தினரை எவராலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்க முடியாதெ னினும் அதேவேளை, கடந்த சில வருடங்களாகச் சீனாவின் பாதுகாப்புச் செலவீனங்கள் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அலுமினியம் மற்றும் உருக்கு ஆகியவற்றில் சுங் கவரியை அமுல்படுத்தும் திட்டத்தை அமெரிக்க ஜனா




திபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்ததைத் தொடர்ந்து சீனாவின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (10)

## அமெரிக்க இயற்கை அனர்த்தங்களை துல்லியமாக அறியும் கோயஸ்-எஸ் செயற்கைக்கோள் விண்ணில் வெற்றிகரப் பயணம்

(வோஷிங்டன்)

வானிலை நிலவரங்களை துல்லியமாக முன்கூட்டியே கண்டறியும் வகையில் மேம்படுத்தப்பட்ட கோயஸ்-எஸ் என்ற செயற்கைக்கோளை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா விண்ணில் செலுத்தியுள்ளது.

கோயஸ்-எஸ் (GOES-S) செயற்கைக்கோள் அட்லஸ் 5 (ATLAS 5) ரொக்கெட் மூலம் கேப் கேனவரலில் உள்ள தளத்தில் இருந்து ஏவப்பட்டது. வானிலை நிலவரங்களை முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்காக



மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுடன் கோயஸ்-எஸ் செயற்கைக்கோள் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்திய மதிப்பில் சுமார் 70 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்த செயற்கைக்கோளை நாசா விண்வெளி ஆய்வு மையம் விண்ணில் செலுத்தியுள்ளது.

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் ஏற்படும் புயல், காட்டுத் தீ, வெள்ளம், மண் சரிவு போன்ற இயற்கை பேரிடர்களை துல்லியமாக அறிவதற்கு இந்தச் செயற்கைக் கோள் உதவும். இதுகுறித்து நாசா விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கையில், வானிலை உலகத் தொழில்நுட்பத்தில் இது முக்கிய மைல்கல்லாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளனர். (10)

# அடுத்த இலக்கு பொதுத் தேர்தல்

## கூட்டு எதிரணியின் திட்டம் குறித்து மகிந்த

(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சியின் அடுத்த இலக்கு பொதுத் தேர்தலுக்கு தயாராதல் ஆகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு பெற்றுக்கொடுத்த தீர்ப்பின் பின்னர் அரசாங்கம் பாடம் படித்துக் கொள்ளும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.**



அரசாங்கத்தின் மீது மக்களின் நம்பிக்கை குறைந்துள்ளதாகவும், பொருட்களின் விலை இன்னும் உயர்ந்து சென்று கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஐ.தே.கவின் ஒரு குழுவும் ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பெண் பிரதிநிதிகளின் பெயர் குறிப்பிடப்படாவிடின் வர்த்தமானியில் வெற்றிடமாக அறிவிக்கப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வெற்றிபெற்ற சகல கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களும் நாளை 7 ஆம் திகதிக்கு முன்னர் பெண் பிரதிநிதிகளின் பெயர் அடங்கிய தமது பெயர்ப்பட்டியலை தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.

பெண் பிரதிநிதிகளின் பெயர் குறிப்பிடப்படாத பட்சத்தில் குறித்த கட்சி அல்லது சுயேட்சை குழுவின் பெயர்ப் பட்டியலின்படி வர்த்தமானி அறிவித்தலில் பெண் வேட்பாளர்களுக்கான பதவி வெற்றிடமாகவே அறிவிக்கப் படுமென மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம் மொஹமட் தெரிவித்தார்.

பெண் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் கட்சிகளின் கவனமற்ற செயற்பாடு குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்றங்களுக்கான பெண் பிரதிநிதிகளின் பெயர் குறிப்பிடுவதில் கட்சிகள் தனது பொறுப்பற்ற தன்மையினை வெளிப்படுத்தி வருகின்றன. சட்ட உறுப்புரைகளில் சகல கட்சிகளிலும் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இதே போன்று சுயேட்சை குழுக்களும் இந்த 25 சதவீத பிரதி நிதித்துவத்துக்கு முக்கிய இடத்தினை கொடுக்க வேண்டும்.

பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை தொடர்பிலும் அவசியம் தொடர்பிலும் சகல கட்சிகள் அல்லது சுயேட்சை குழுக்களை வலியுறுத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளது. அவ்வாறு தேர்தல் ஆணைக்குழு கோரும் பெண் பிரதிநிகளின் எண்ணிக்கைக்கு இணங்க சகல கட்சிகளும் தனது முழு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். கட்சிகள் அனைத்தும் சட்டம் தொடர்பில் சிந்தித்து செயற்படவேண்டும்.

பெருமளவிலான கட்சிகள் தனது கட்சிக்கான உறுப்பினர் பெயர்ப்பட்டியலில் பெண் வேட்பாளர்களுக்கான எண்ணிக்கைக்கு பெண் உறுப் பினரை தெரிவு செய்வதற்கு பதிலாக ஆண் உறுப்பின ரின் பெயரை பட்டியலில் இணைக்கக்கூடிய வாய்ப்புக்களும் எழுந்துள்ளன. அவ்வாறு பெண் பிரதிநிதிகளின் பெயருக்கு பதிலாக ஆண் உறுப்பினர் ஒருவரின் பெயர் இணைக்கப்பட்டால் அவ் உறுப்பினர்கள் உள்ளூர் மன்றங்களில் சேவையாற்ற தகுதியற்றவர்களாகவே கருதப்படுவர்.

மேலும் பெண் பிரதிநிதிகளுக்கு பதிலாக ஆண் பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்தால் தேர்தல் ஆணைக்குழு வெளியிடவுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறித்த பெண் பிரதிநிதிகளுக்கான பதவி கள் வெற்றிடமாகவே அறிக்கையிடப்படும். வர்த்தமானி அறிவித்தலை மீறி உள்ளூர் சபைகளில் குறித்த ஆண் பிரதிநிதிகள் பதவி வகிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரிகேடியர் பிரியங்கவின் குடும்பத்திற்கு தேவையான உதவிகளை வழங்கப் பணிப்பு

## இராணுவத் தளபதி நடவடிக்கை



(கொழும்பு)

பிரித்தானியாவில் தங்கியுள்ள, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் குடும்பத்தினரின் தேவைகளுக்காக நிதியுதவியை வழங்க இராணுவ தளபதி உத்தரவிட்டுள்ளார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ இலங்கைக்கு அழைக்கப்பட்ட போதிலும், அவரது குடும்பத்தினர் இன்னமும் பிரித்தானியாவிலேயே வாழ்ந்து வருகின்றனர். பிரியங்க நாட்டுக்கு அழைக்கப்பட்டமையினால் தூதரகப் பணிக்காக அவருக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் கிடைக்கவில்லை. தற்போது அவருக்கு பிரிகேடியர் பதவிக்கான சம்பளம் மாத்திரமே கிடைக்கின்றது.

அதற்கமைய முதற்கட்டமாக இராணுவ தளபதியின் உத்தரவுக்கு அமைய பிரியங்க பெர்னாண்டோவின் குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் அவருக்கு நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இராணுவ அதிகாரியின் குடும்பத்திற்காக, இந்த முறையில் இராணுவம் நிதி உதவி வழங்கும் வரலாற்றில் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கொடுக்கவேண்டிய விலை!

எதுவும் இலவசமாய் கிடைப்பதில்லை. ஒன்ற்ற இழந்துதான் ஒன்றைப் பெற முடியும். ஒன்றை விலையாகக் கொடுத்துத் தான் மற்றதை வாங்க முடியும்.

எனக்குத் தெரிந்த ஒருவர். பெரிய தொழிலதிபர். அவருக்கு எப்போது பார்த்தாலும் பிசினஸ் நினைப்புத்தான். எந்தக் கோட்டையைப் பிடிக்கலாம்; எதை எப்படி வளைக்கலாம் என்றே சிந்திப்பவர். வேறு நினைப்புகள் இருப்பதே இல்லை. விடிகாலையில் புறப்பட்டால் பிசாசுபோல் நள்ளிரவில் வீடு திரும்பும் மனிதராவார்.

பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள்; எப்படிப் படிக்கின்றார்கள் என்றெல்லாம் மேலோட்டமாகத் தான் அக்கறை காட்டுவார். என்ன ஆயிற்று தெரியுமா? பிள்ளைகள் படிக்காமல் போனதோடு உருப்படாமலும் போய் விட்டார்கள்.

மிக நன்றாகத் தெரிந்துவிட்டது– அவருக்குப் பிறகு அவர் சொத்து எப்படியும் சீரழியப் போகிறது என்று.

இவர் மட்டும் கொஞ்ச குடும்ப அக்கறை எடுத்துக் கொண்டிருந்தால் கொஞ்சமாகச் சம்பாதித்திருந்தால்கூட அது பிள்ளைகளால் பல்கிப் பெருகியிருக்கும்.

கல்வியையும் நல்லொழுக்கத்தையும் விலையாகக் கொடுத்துக் கொண்டிருந்தால் கொஞ்சமாகச் சம்பாதித்திருந்தால் கூட அது பிள்ளைகளால் பல்கிப் பெருகியிருக்கும்.

கல்வியையும் நல்லொழுக்கத்தையும் விலையாகக் கொடுத்துச் சேர்த்த இந்தப் பணம் என்ன நன்மையைச் செய்தது? அத்தனையும் வீண்! தன் வாழ்க்கையையும் வீணடித்துவிட்டு தலைமுறையையும் வீணடித்த இவர் மன்னிப்புக்கு அப்பாற்பட்டவர்.

பணத்தைக் கொடுத்தால் நல்ல பொருளும் கிடைக்கும்.கெட்ட பொருளும் கிடைக்கும். மற்றவிடயங்களில் அப்படி அல்ல!

உழைப்பை விலையாகக் கொடுத்தால் உயர்வை வாங்கலாம்.

முயற்சியை விலையாகக் கொடுத்தால் முன்னேற்றத்தை வாங்கிச் சேர்க்கலாம்.

தியாகத்தை விலையாகக் கொடுத்தால் நற்பெயரை வாங்கலாம்.

அன்பையும் பிரியத்தையும் விலையாகக் கொடுத்தால் எதை வேண்டுமானாலும் வாங்க முடியும்.

நல்ல பழக்கங்களை விலையாகக் கொடுத்தால் வாழ்க்கை தான் சூன்ய மாகும்.

நேரத்தை விலையாகக் கொடுத்தால் கடிகாரம் போல ஓர் இடத்தைத் தான் சுற்ற முடியும். வளர முடியாது.

நல்ல விடயங்களை எக்காரணம் கொண்டும் விலையாகக் கொடுத்துவிடக் கூடாது. நாம் எதை விலையாகக் கொடுக்கிறோம் என்பதைப் பொறுத்தே நம் வளர்ச்சியும் எதிர்காலமும் நிர்ணயிக்கப்படுகின்றன!

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கை மனிதவுரிமை விவகாரம் குறித்து ஜெனிவாவில் 14 உப குழுக்கூட்டங்கள்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடரில் நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான உபகுழுக் கூட்டங்களில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி தொடர்பில் வலியுறுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக அமெரிக்கா, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இந்த உபகுழுக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனிவாவில் இலங்கை மனிதவுரிமை விவகாரம் தொடர்பில் 14 உபக்குழுக் கூட்டங்கள் ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 12ஆம் திகதி பாரதி கலாசார அமைப்பினால் இலங்கை மனிதவுரிமை விவகாரம் தொடர்பில் ஒரு உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. மனித உரிமை பேரவை வளாகத்தின் 23 ஆம் இலக்க அறையில் இந்த உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. அதேபோன்று 13 ஆம்திகதி தமிழ் உலகம் என்ற அமைப்பினால் இலங்கை தொடர்பில் ஒரு உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. 7 ஆம் இலக்க அறையில் நடத்தப்படவுள்ள இந்த உபகுழுக் கூட்டத்தில் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

14 ஆம்திகதி புத்துருவாக்க சமூக திட்ட முன்னணி என்ற அமைப்பினால் மற்றுமொரு இலங்கை தொடர்பான விசேட உபகுழு கூட்டம் 21 ஆம் இலக்க அறையில் நடத்தப்படவுள்ளது. 15 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் ஒரு சர்வதேச மனித உரிமை அமைப்பினால் இலங்கை விவகாரம் தொடர்பில் விசேட உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

குறிப்பாக இலங்கையில் தன்னிச்சையாக தடுத்துவைத்தல் விவகாரம் தொடர்பிலேயே இந்த உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. இதில் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டு இலங்கை விவகாரம் தொடர்பில் உரையாற்றவுள்ளனர். 21 ஆம் இலக்க அறையில் இந்த உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் பசுமைத் தாயகம் அமைப்பினால் ஒரு உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. அந்தக் கூட்டமும் 21ஆம் இலக்க அறையிலேயே நடத்தப்படவுள்ளது.

மேலும் மற்றுமொரு சர்வதேச அமைப்பினால் எதிர்வரும் 19 ஆம்திகதி ஜெனிவா மனிதவுரிமை பேரவை வளாகத்தில் 24ஆம் இலக்க அறையில் ஒரு உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தக் கூட்டமானது இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நாவின் மீளாய்வு என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

இது இவ்வாறிருக்க பசுமை தாயகம் அமைப்பினால் மற்றுமொரு இலங்கை தொடர்பான உபகுழுக்கூட்டம் 20 ஆம் திகதி 25 ஆம் இலக்க அறையில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் நிலைமாறுகால நீதி தொடர்பாக இந்த உபகுழுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது. அதே தினத்தன்று சர்வதேச பௌத்த நிவாரண அமைப்பினால் இலங்கை தொடர்பான ஒருவிசேட உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. 27ஆம் இலக்க அறையில் இந்த உபகுழுக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. அந்தவகையில் இந்த



அனைத்து உபகுழுக் கூட்டங்களிலும் இலங்கை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. இவை உள்ளடங்கலாக மொத்தமாக 14 உபகுழுக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த அனைத்துக் கூட்டங்களிலும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இலங்கையின் நீதிப்பொறிமுறை குறித்து வலியுறுத்தவுள்ளனர். ஏற்கனவே கடந்த அமர்வில் உரையாற்றிய கனடா நாட்டின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசாங்கம் பொதுநலவாய மற்றும் சர்வதேச விசாரணையாளர்கள் நீதிபதிகளை உள்ளடக்கிய பொறிமுறையை முன்னெடுப்பதற்கான அர்ப்பணிப்பை வெளிக்காட்ட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை இலங்கை விவகாரம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் தென்னிலங்கை பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு உப நிகழ்வுகளில் உரையாற்றவுள்ளதுடன் பலரையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்கள், மாகாணசபை உறுப்பினர்களுடன் ஐந்துபேரைக் கொண்ட குழு ஜெனிவா நோக்கி செல்லவுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும் இம்முறை ஜெனிவா நோக்கி பயணிக்கவுள்ளனர். குறிப்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இம்முறை ஜெனிவா கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்களைக் கொண்ட குழுவும் இம்முறை ஜெனிவாவில் முகாமிட்டு பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினை தொடர் பில் எடுத்துக்கூறவுள்ளன.

தென்னிலங்கையின் "எலிய" அமைப்பின் பிரதிநிதியான முன்னாள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகரவும் ஜெனிவா கூட்டத் தொடரில் கலந்து கொண்டு பிரசாரம் செய்யவிருக்கிறார். அதாவது இலங்கை அராங்கம் இராணுவத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் செயிட் ராட் அல்ஹூசைன் கூறுகின்ற அனைத்தையும் அரசாங்கம் கேட்பதாகவும் அவர் ஜெனிவாவில் எடுத்துக்கூறவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். சரத் வீரசேகர அடுத்த வாரம் ஜெனிவா செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சரத் பொன்சேகாவுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவி வழங்க வேண்டாம்

## ஜனாதிபதியிடம் நேரில் கோரிக்கை விடுத்த மகிந்த; மாடி வீடுகளிலுள்ள பொலிஸ் அதிகாரிகளும் அச்சம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பில் பேசிக்கொண்ட விடயங்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பு கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் சகோதரர் டட்லி சேனநாயக்கவின் வீட்டில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் போது ஜனாதிபதியிடம் மகிந்த கோரிக்கை ஒன்று விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சரத் பொன்சேகாவுக்கு, சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவி வழங்க வேண்டாம் என மகிந்த கேட்டுக் கொண்டுள்ளார்.

"நாங்கள் அனைத்து ஆதரவுகளையும் வழங்குகின்றோம். ரணிலை பிரதமர் பதவியில்வைத்து கொண்டு நீங்கள் இதே முறையில் ஆட்சியை நடத்திச் செல்லுங்கள், நாங்கள் எந்த முறையிலும் தடை ஏற்படுத்துவதில்லை. எனினும் சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவியை பொன்சேகாவுக்கு வழங்க வேண்டாம். வழங்கினால் அனைத்து நடவடிக்கைகளும் குழம்பி விடும்" என மகிந்த, ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

தான் ஜனாதிபதியிடம் தற்போதைக்கு விடுக்கும் ஒரே கோரிக்கை' இதுவென அவர் கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் காணப்பட்ட நிலைமைக்கமைய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு பதவிப் பிரமாணம் வழங்கப்படவிருந்தது. எனினும் இந்தச் சந்திப்பின் பின்னர் அவருக்கு பதவிப் பிரமாணம் வழங்கப்படாது என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மாடி வீடுகளை கொண்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் சரத் பொன்சேகாவுக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுப் பதவி கிடைப்பது குறித்து அச்சத்தில் உள்ளனர்.

அதற்கமைய மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ள அதே அச்சம் இந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு இருப்பதாக கூறப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரிகளுக்கு வருமானத்தை வழங்கிய போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான தகவல் பொன்சேகாவிடம் உள்ள தாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மைக்காலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர்.

எனினும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஜனாதிபதி - பிரதமருக்கு இடையில் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் சரத் பொன்சேகா என்ற துருப்புச் சீட்டு ரணிலின் கையிலுள்ள வரையில், அவரது பிரதமர் பதவிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாதென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# தொற்றாநோயை கட்டுப்படுத்தும் ஆணைக்குழு துணைத்தலைவர் பதவி ஜனாதிபதி மைத்திரிக்கு

(கொழும்பு)

உலக சுகாதார அமைப்பிற்கு உட்பட்ட, தொற்றா நோயைக் கட்டுப்படுத்துவதற்கான, முன்னணி சுயாதீன ஆணைக்குழுவின் துணைத் தலைவர் பதவி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான துணைத் தலைவர் பதவிகள் ஐந்து வழங்கப்பட்டுள்ளன.



பின்லாந்து ஜனாதிபதி, உருகுவே ஜனாதிபதி, ரஷ்ய சுகாதார அமைச்சர் மற்றும் பாகிஸ்தானில் ஓய்வுபெற்ற அமைச்சருக்கும், இந்தத் துணைத் தலைவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, துணைத் தலைவர் பதவிக்கான அனைத்துப் பணிகளையும் முன்னெடுப்பதற்கான பொறுப்பை சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவுக்கு வழங்கியுள்ளார்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கை வெற்றி கொள்ளும் போது. தொற்றா நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சிபாரிசுகளை முன்வைப்பதே சுயாதீன ஆணைக் குழுவிற்கு உள்ள பொறுப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "தொழுகைக்குச் செல்வதை கட்டுப்படுத்தும் சுற்றுநிருபத்தை உடன் இரத்துச் செய்யவும்"

(கொழும்பு)

முஸ்லிம் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஜும் ஆத் தொழுகைக்கு செல்வது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றுநிருபம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம். முக்தார் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

'இலங்கையின் ஒவ்வொரு பிரஜையினதும் மத சுதந்திரம் என்பது அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது அரசியலமைப்பின் 14 ஆம் அத்தியாயம் 1 (2) பிரிவிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிறுவனத் தலைவர்களின் தீர்மானத் திற்கமைவாக நிறுவன செயற்பாடுகளுக்கு தடை ஏற்படாத வகையில் முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக இரண்டு மணிநேர விசேட விடுமுறை வழங்கப்படலாம் என பொது நிர்வாக அமைச்சின் 21/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த சுற்றுநிருபம் தாபனக் கோவையின் Xii ஆம் அத்தியாயம் 2:1 இற்கு திருத்தமாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை அண்மையில் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இந்நடவடிக்கையானது முற்றுமுழுதாக இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்பதுடன் அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மத சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

எனவே முஸ்லிம் அரச ஊழியர்களின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த சுற்றுநிருபத்தை உடனடியாக வாபஸ் பெற்று, முஸ்லிம் ஊழியர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இல்லையேல் நீதிமன்றம் சென்று அதனை சவாலுக்குட்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனவும் அறியத் தருகின்றோம்" என்று அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)




# 'முஸ்லிம்கள் இன்று செல்லாக்காசு'

## அமைச்சர் றிசாத் விரக்தியுடன் அறிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தை நம்பிய முஸ்லிம்கள் இன்று செல்லாக்காசாக ஆக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன், அம்பாறை பள்ளிவாசலையும், முஸ்லிம்களின் சொத்துக்களையும் சேதப்படுத்தியவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட துர்ப்பாக்கிய சம்பவம் இதனையே உணர்த்துகின்றது என்றார்.



பள்ளிவாசலை அடித்து நொறுக்கிய சம்பவத்தை மறைத்து, இரண்டு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பவமாக அம்பாறை நாசகாரச் செயலைக் காட்டி, நீதிமன்றத்தை பிழையாக வழிநடத்தி, நாசகார சக்திகளுக்கு பிணையைப் பெற்றுக் கொடுத்த பொலிஸாரையும், அதற்குத் துணை நின்ற அரசாங்கத்தையும் தமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் உள்ள பெரும்பான்மையின அரசியல்வாதிகளின் ஆசியுடனும், பொலிஸாரின் வழி நடத்தலுடனும் இந்தப் பிணை வழங்கும் சம்பவம் நன்கு சோடித்து, மிகவும் நேர்த்தியாக அரங் கேற்றப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம்கள் மீதான இந்த நாசகாரச் செயலை இனவாத சம்பவம் கிடையாது எனவும், இரண்டு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற பிரச்சினை எனவும் பொலிஸார் நாக்கூசாமல் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சட்டத்தைப் பேண வேண்டியவர்கள், மக்களைப் பாதுகாப்பவர்கள் இவ்வாறு கேவலமாக நடந்து கொண்டிருப்பது, நல்லாட்சி அரசின் ஓட்டைகளையே வெளிப்படுத்தியுள்ளது.

மனுதாரரின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தும், நல்லாட்சி அரசாங்கத்தின் காவலர்கள் இவ்வாறு நடந்து கொண்டிருப்பது சட்டத்தை மதிப்பவர்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

இனவாதிகளின் மிரட்டல்களுக்கும், பௌத்த மதகுருமார்களின் அச்சுறுத்தல்களுக்கும் நல்லாட்சி அரசாங்கம் பயந்து, பொலிஸாரின் ஊடாக இவ்வாறான கைங்கரியத்தை செய்திருப்பது, அவர்களை ஆட்சிக் கட்டிலுக்குக் கொண்டுவந்த சிறுபான்மை மக்களுக்கு கன்னத்தில் அறைவது போன்று இருக்கின்றது.

வெளிப்படையாகவும், தெளிவாகவும் தெரிந்த ஓர் இனவாத அட்டகாசத்தை மறைத்து நீதிமன்றத்தை பிழையாக பொலிஸார் வழிநடத்தி இருப்பதை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த காலங்களிலும் இனவாத பௌத்த தேரர்களின் வெளிப்படையான அட்டகாசங்களையும், அட்டூழியங்களையும் மறைத்து பொலிஸார், பிணை வழங்கி இருக்கின்றனர்.

இப்போது, இனவாத மதகுருமார்களே நல்லாட்சியை வழிநடத்துவது வெளிப்படையாக வெட்டவெளிச்சமாகியுள்ளது. அரசாங்கம், முஸ்லிம்கள் மீதான இவ்வாறான தொடர்ச்சியான சம்பவங்களை கண்டும் காணாதது போல் இருந்தால், அதன் விளைவுகளை அனுபவிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை" என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நேர்முகப்பரீட்சைக்கு சென்ற மகனை சிறையில் அடைத்த பொலிஸார்

## கண்ணீர் மல்கிய தமிழ்த்தாய்

(அட்டப்பள்ளம்)

அம்பாறை அட்டப்பள்ளம் மயானக்காணி அபகரிப்பு சம்பவ தினத்தன்று கொழும்பில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு சென்றிருந்த எனது மகனையும் பொலிஸார் அநியாயமாக கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துவிட்டனர்.

சம்பவத்தோடு சம்பந்தப்படாத எனது மகனின் பெயர் எழுத்துமூலமாகவே பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தாய் ஒருவர் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

அட்டப்பள்ளம் கிராமத்திற்கு நேற்று முன்தினம் மாலை நேரடியாக சென்று மக்களை சந்தித்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பி. பிரசாந்தனிடத்தில் இவ்வாறு மேற்படி தாய் கண்ணீருடன் கூறினார்.

இதேபோன்று மேலும் பல தாய்மாரும் பொது மக்களும் முறையிட்டனர். சம்பவ தினத்தன்று இடம்பெற்ற அனைத்து விடயங்களும் அதன் பின்னரான நிலைமைகள் தொடர்பிலும் இதன் போது பொது மக்கள் தெளிவுபடுத்தினர்.

இங்கு நிலைமைகளை கேட்டறிந்து கொண்ட பிரசாந்தன் கூறுகையில்,

அட்டப்பள்ளம் மக்களின் அவலத்தை தீர்ப்பதற்காக சகல கட்சி தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்கும் குரல் கொடுப்பதற்கும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி தயாராக இருக்கிறது. சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை முதலில் சட்டரீதியான முறையில் விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு தேவையான மேலதிக உதவிகளையும் செய்ய தயாராக இருக்கிறோம்.


குறித்த பிரதேச மக்களின் பாவனைக்குட்பட்ட மயானத்திற்கான ஆவணங்களை அடிப்படையாக வைத்து அதனை பெற்றுக்கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட தீர்மானித்துள்ளோம்.

குறித்த சம்பவம் எதிர்காலத்தில் எந்தவித இனமுறுகலையும் ஏற்படுத்தி விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றோம். தனிநபர் பிரச்சினை சமூகங்களுக்கிடையிலான இனப்பிரச்சினையாக மாறிவிடக் கூடாது.

கடந்தகாலத்தில் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் இனமுறுகல் நிலை தோன்றிய நிலையில் தமது கட்சி ஆட்சி அமைத்த பின்னர் அப்பிரதேசங்களில் சுமுக நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பதவி நீக்கம்

## ஊழியர்கள் போராட்டம்




(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை ஆணையாளர் வி.கே.ஏ. அநுர அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாநகர சபை ஊழியர்களால் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டம் கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு மாநகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தில் அதன் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

மீதோட்டமுல்ல குப்பை மேடு சரிவு விவகாரத்தில் அநுர மீது குற்றச்சாட்டு காணப்படுகின்றமையினால் அவ்விடயம் தொடர்பில் விசாரணையை முன்னெடுக்க கடந்த 2ஆம் திகதி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபையின் பதில் ஆணையாளராக லலித் விக்கிரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடக்கிற்கு வருகின்ற மகாவலித் திட்டத்தை நாம் எதிர்க்கவில்லை; நோக்கத்தை எதிர்க்கின்றோம்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வடக்கிற்கு வருகின்ற மகாவலி திட்டத்தை நாம் எதிர்க்கவில்லை. அதன் நோக்கத்தையே நாம் எதிர்க்கின்றோம். அதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் நாம் எமது வடமாகாணத்திற்கான விவசாய கொள்கை ஒன்றை வகுத்துள்ளோம்என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் பல குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயத்திற்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த நிலைக்கு மக்கள்தான் காரணம் எனக் கூற முடியாது. அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாகவே குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அழிந்து போயின. பல நூற்றுக் கணக்கான குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்புக்களாக மாற்றம் பெற்றுள்ளமையால் அதன் கீழான விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

மகாவலி திட்டத்துடன் தொடர்புடையதாக படிமுறை நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றை தற்போது இங்கு கொண்டு வந்துள்ளார்கள். எங்களுடைய பிரதேசத்தில் இருக்கின்ற 28 அல்லது 30 குளங்கள்கூட அதனால் பயனடையவுள்ளதாக கூறுகின்றார்கள். ஆனால் இந்த முறை ஒரு சிறப்பானதாக இருந்தாலும் கூட இங்கு கொண்டு வருகின்ற போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மொரக்காகந்த நீரினை இங்கு கொண்டு வருவதாக இருந்தால் சேமமடு குளத்தில் அந்த நீரை சேமித்து இரணைமடுக்குளம் வரை அந்தத் திட்டத்தை கொண்டு செல்வதாக அவர்களது திட்டங்கள் உள்ளன. ஆனால் அந்த திட்டங்களை மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்துகின்ற போது அது எங்களுடைய வடக்கு மாகாண அரசை அல்லது ஆட்சியை அல்லது எங்களது இருப்பை கேள்விக்குறியாக மாற்றக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது.

ஆகவே, அபிவிருத்தியை மட்டும் நோக்காகக் கொண்டு இந்த திட்டத்தை அரசாங்கம் செய்வதாக இருந்தால் இது தொடர்பில் ஒரு ஒப்பந்தத்தை அல்லது பேச்சுவார்த்தையை வடக்கு மாகாணத்துடன் மேற்கொள்ள வேண்டும். இந்த நீர் வடக்கு மாகாணத்திற்கு வருகின்ற போது அது வடக்கு மாகாண நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழே வரவேண்டும். அப்படி செய்வார்களாக இருந்தால் அது சிறப்பான திட்டமாக அமையும். மற்றவர்கள் சந்தேகம் கொள்ள முடியாது.

மணலாறுப் பிரதேசம் மகாவலி குடியேற்றத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட பின் தான் அங்கு பல குடியேற்றங்கள் தோற்றம் பெற்றன. தெற்கில் உள்ள மக்களை அங்கு கொண்டு வந்து குடியேற்றினார்கள். இது ஒரு சட்டத்திற்கு புறம்பான செயல்.

அபிவிருத்தி மட்டும் தான் நோக்கமா என பல விடயங்களை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அரசியலில் நாங்கள் சில தவறுகளை செய்வோமாக இருந்தால் இன்று ஆதரிக்கும் மக்களே எதிர்காலத்தில் நீங்கள் ஏன் இந்த திட்டத்திற்கு ஆதரவு வழங்கினீர்கள் எனக் கேட்பார்கள். நீங்கள் அனுமதித்ததால் தான் எங்களுடைய பிரதேசம் பறிபோய் விட்டது என்று கூறுவார்கள்.

எனவே திட்டம் என்பது எமது பிரச்சினை இல்லை. அதன் நோக்கம்தான் எமது பிரச்சினை. இதுதவிர, வடக்கு மாகாணத்திற்கான பயிர்ச் செய்கை தொடர்பான ஒரு கொள்கைத் திட்டத்தை வகுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நெற்செய்கை தொடக்கம் ஒவ்வொரு பயிர்ச் செய்கை தொடர்பிலும் வகுத்து அதன் மூலம் வடக்கு மாகாண விவசாயத்துறையை முன்னேற்ற வேண்டும் என்பதே எமது நோக்கமாக இருந்தது. அதனால் வடக்கு மாகாண விவசாய கொள்கைளை நாம் அறிமுகப்படுத்துகின்றோம். அதன்மூலம் நாம் விவ சாயத்தை மேலும் முன்னேற்றமான பாதைக்கு கொண்டு செல்ல முடியும். (2-250)

## சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் வவுனியாவில் நேற்று கௌரவிக்கப்பட்டனர்





(குருமன்காடு)

வவுனியாவில் சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாயமும் கமநலசேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

வவுனியாவில் 2017 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட சிறந்த விவசாய போதனாசிரியர் மட்ட வெற்றியாளர்களான சிறந்த விவசாயிகள், சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர், சிறந்த சேதன விவசாய செய்கையாளர்கள், நவீன விவசாய இயந்திரமயமாக்கலை மேற்கொள்ளும் சிறந்த விவசாயிகள், இளம் விவசாயிகள், பெண் வலுவூட்டலை நிலைப்படுத்துவதற்காக சிறந்த விவசாய பெறுமதி சேர் நடவடிக்கையுடன் வணிகமுறைமையையும் பின்பற்றும் விவசாயப் பெண்கள் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், இ.இந்திரராசா, ம.தியாகராஜா, அ.ஜெயதிலக, த.செனவிரட்ன, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சோமரத்தின விதான பத்திரன மற்றும் கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் எஸ்.ஜே.அரசகேசரி ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன், வவுனியா மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1348

Search for people, places and things Nagendram Home

### சயிந்தன்

மாசத்துக்கு ஒரு வாட்டிதான் சம்பளம் வருது



ஆனா ஆசைகள் மட்டும் முப்பது நாளைக்கு 300 விதமா வருது

### அஜய்

நேர்மையான உழைப்பு தகுந்த கூலி தராவிட்டாலும்



தினமும் நிம்மதியான தூக்கத்தைத் தருகின்றது

### கீர்த்தனா

பள்ளிப் பருவத்தில்...



பலரும் நான்கு வேளை சாப்பிட்டவர்களாகத்தான் இருப்பார்கள்...

### திரோஜன்

முதல் மூன்று தோசை சாப்பிடுற வரைக்கும் வேணுமா வேணுமானு கேட்கிறாங்க...



ஐந்தாவது தோசை சாப்பிடும்போது போதுமா போதுமானு கேட்கிறாங்க

### ரதீபன்

வீட்டுக்கு வெளியே சைக்கிள் ஓடினா ஏழை...



வீட்டுக்குள்ள சைக்கிள் ஓடினா பணக்காரன்

### யது

இதுதான் கடைசி வாய் என நீங்கள் ஊட்டிவிட்ட உணவில்



உங்கள் அன்பைத் தவிர வேறொன்றும் இல்லை அம்மா...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்கும் பலம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் உண்டு

## சிரேஷ்ட உறுப்பினர்கள் கூறுகிறார்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை ஜனநாயக ரீதியில் தீர்க்க முயற்சிக்கின்றோம். கட்சியினை குழப்பும் எந்தவொரு நகர்வுகளும் முன்னெடுக்கப்படாது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்தன்ர்.

பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்கும் பலம் எம்மிடம் உள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்க வேண்டும் எனவும் தலைமைத்துவத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் எனவும் கட்சியின் பின்வரிசை (இளம் எம்.பி.க்கள்) தெரிவித்து வருகின்றமை மற்றும் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருகிற முயற்சிகள் குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

இது குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் கபீர் ஹசீம் கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மறுசீரமைப்பு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் கட்சிக்குள் சில கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன. எனினும் எமது அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளில் கட்சியின் ஒற்றுமை மிகவும் அவசியமானதாகும்.

தனித்து செயற்பட ஆரம்பிக்கும் சந்தர்ப்பங்களில் எம்மை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். இதில் கட்சிக்குள் ஒற்றுமையும் ஜனநாயகமும் நிலவ வேண்டியது அவசியமாகும். அவ்வாறான நிலையில் இப்போது ஒருசிலர் கட்சியின் செயற்பாடுகளை குழப்பும் வகையில் சில தீர்மானங்களை முன்வைத்து வருகின்றனர்.

எனினும் இவை எதுவும் கட்சியின் ஏகமனதான தீர்மானம் அல்ல.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றினை கொண்டுவரும் நிலையில் அதனை நாம் முறியடிப்போம்.

ஆனால் கட்சிக்குள் சிலர் அதற்காக தூண்டுதலாக இருக்கும் நிலையில் பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு ஜனநாயக ரீதியில் தீர்வுகளை பெற்றுக் கொள்ளவே நாம் முயற்சிக்கின்றோம். முக்கியமான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெறும். அதில் சந்தேகம் இல்லை. தலைமைத்துவ மாற்றம் என்பது தொடர்பில் கட்சிக்குள் ஆழமாக சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. இதில் உடனடியாக தீர்மானங்களை முன்னெடுக்க முடியாது என வும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் மங்கள சமரவீர கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலைப்பாடு என்னவென்பது எமக்கு நன்றாகவே தெரியும். நாம் ஐக்கிய தேசியக் கட்சியின் சகல தரப்புடனும் இணைந்து செயற்பட்டு வருகின்ற காரணத்தினால் அனைவரும் எவ்வாறு சிந்திக்கின்றனர் என தெரியும்.

கட்சிக்குள் மறுசீரமைப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் கட்சி உள்ளது. அதற்கமைய அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரும் இணைந்து பல்வேறு மாற்றங்களை முன்னெடுக்கும் திட்டங்களை இதில் முன்வைத்துள்ளோம்.

ஆகவே நாளை (இன்று) கூடும் கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்திலும் அதன் பின்னர் கட்சி செயற்குழுக் கூட்டத்திலும் முக்கியமான விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும். எனினும் கட்சிக்குள் ஒரு சிலர் உணர்ச்சிவசப்பட்டு தீர்மானங்களை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களின் செயற்பாடுகள் காரணமாக எந்த வித நகர்வுகளும் இடம்பெறப்போவதில்லை.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதாக கூறப்படுவதை வெறும் வாய் வார்த்தைகளாகவே கருதுகின்றோம். அவ்வாறு கொண்டு வந்தாலும் நாம் சுமுகமாக தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கூறுகையில்,

இன்று நாட்டில் பாரிய அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு சிலரது தனிப்பட்ட தேவைகளை கொண்டு கட்சியினை குழப்பும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கட்சியின் தலைமைத்துவம் குறித்து நாம் அதிருப்தி கொள்ளவில்லை. மாற்றங்கள் அவசியம். அது கட்சியின் வேலைத்திட்டங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும். மாறாக கட்சியினை பலவீனப்படுத்தும் தீர்மானங்களை முன்னெடுக்க முடியாது.

கட்சியின் இளம் உறுப்பினர்கள் அதனை தெரிந்து கொள்ள வேண்டும். மாற்றங்களை நாமும் ஏற்றுகொள்ள வேண்டும் என்பதை நாம் மறுக்கவில்லை.

ஆனால் நாட்டினை முன்னெடுக்க பலமான கட்சி அவசியம். இந்த நாட்டின் பொருளாதார செயற்பாடுகளை கட்டியெழுப்ப சரியான தலைமைத்துவம் அவசியம். ஆகவே தலைமைத்துவத்தை பலப்படுத்த வேண்டிய தேவை இளம் உறுப்பினர்கள் அனைவருக்கும் உள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவின் பின்னரே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு நெருக்கடி நிலைமையை உருவாக்கியுள்ளது. எனினும் இந்த தேர்தலில் அரசாங்கத்திற்கு மக்கள் ஒரு எச்சரிக்கையை மட்டுமே விடுத்துள்ளனர். அதேபோல் பிரதமரை நீக்கவும் ஒரு அணி முயற்சித்து வருகின்றது. ஒரு சிலரது தூண்டுதலில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் தீர்மானம் எடுக்க முடியாது. கட்சியின் மறுசீரமைப்பு திட்டங்கள் அவசியம். அதனை நாம் சரியாக முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# கடந்த வருடத்தில் 428பேர் வவுனியாவில் தற்கொலை

## வைத்தியசாலை பணிப்பாளர் அகிலேந்திரன் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த ஒரு வருடத்தில் 428 பேர் தற்கொலை செய்துள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கு. அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு மாத்திரம் 393 பேர் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவம் வவுனியா பொது வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது. அதேபோல் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மார்ச் முதலாம் திகதிவரை 35 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இவ்வாறாக தற்கொலைகள் அதிகரித்து செல்லுமானால் எமது சமூகம் வினைத்திறனில்லாத சமூகமாக நாளடைவில் மாறிவிடும் என வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த வாரத்தில் அடுத்தடுத்து நடைபெற்றிருந்த தற்கொலைகள் தொடர்பாகவும் தற்கொலைகளை தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், கடந்த 2017 ஆம் ஆண்டு வவுனியாவில் மட்டும் 393 பேர் தற்கொலைக்கு முயற்சி செய்து கொண்டுள்ளதாக வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது. அதேபோல் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மார்ச் முதலாம் திகதிவரை 35 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர்.

எமது சமூகத்தில் 12 வயது மற்றும் 45 வயதிற்கு இடைப்பட்ட நபர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த தற்கொலைகள் நாளாந்தம் அதிகரித்து செல்வதை காணக்கூடியதாக இருக்கிறது. தற்கொலைகள் குறித்து பொது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்கள் எவ்வளவு சீரழிந்துள்ளது என்பதை இந்த தற்கொலை முயற்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

தொலைக்காட்சி பெட்டிகள், ஆடம்பரப்பொருட்கள் வருவதற்கு முன்னைய காலப்பகுதியில் தற்கொலை என்பது அரிதாகவே காணப்பட்டது. இந்த விகிதாசாரத்தில் எப்பொழுதும் தற்கொலைகள் அதிகரித்து காணப்படவில்லை.

போருக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு மக்கள் அதிகமாக மன அழுத்தத்திற்கு முகம் கொடுப்பது காரணமாகவும் இந்த தற்கொலைகள் அதிகரித்திருக்கலாம் என நாங்கள் கருதுகிறோம். அதேபோல் இந்த சமூகத்தில் உள்ளவர்கள் எந்த அளவிற்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதும் தங்கள் சுகதுக்கங்களை குடும்பத்தினருக்கு சொல்ல முடியாத நிலையிலும் அதேபோல் நண்பர்கள், உறவினருக்கு சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்த தற்கொலைகள் எடுத்துக்காட்டுகின்றன. எனவே சமூகத்திலிருக்கிறவர்கள் தனித் தீவுகளாக இருப்பதை இந்த தற்கொலையின் வீதம் எடுத்துக்காட்டுகிறது.

முக்கியமாக இளம் பராயத்தினர் சரியாக நல்வழிப்படுத்தப்பட வேண்டும். சினிமாக்களில் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் காட்டப்படும் தற்கொலைக்காட்சிகளும் ஒரு காரணமாக இருக்கிறது. அவ்வாறான காட்சிகள் மனதில் ஆழமாக பதிந்து விடும். ஒரு நபருக்கு தன்னால் பிரச்சினைகளை கையாள முடியாத சந்தர்ப்பம் ஏற்படும் போது அவர் இலகுவாக இவ்வாறான முடிவுகளை எடுக்க தூண்டப்படுகிறார். எனவே ஒவ்வொருவரும் தங்களுக்கு பக்கத்திலுள்ளவர்களின் பிரச்சினைகளை கருத்தில் எடுத்து அவர்களுக்கு எந்த விதத்தில் உதவலாம் என பழகினீர்கள் என்றால் இந்த தற்கொலைகளை குறைத்துக் கொள்ளலாம்.

பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுடன் மனம் விட்டு கதையுங்கள். அவர்களுடன் நெருங்கி பழகுங்கள். சில பிரச்சினைகளை உங்களிடம் பிள்ளைகள் சொல்ல முடியாமல் இருப்பார்கள். நண்பர்களாக நீங்கள் பழகினால் மாத்திரமே தங்கள் பிரச்சினைகளை அவர்கள் உங்களுக்கு முழுவதுமாக சொல்ல முன்வருவார்கள். பிள்ளைகளின் கருத்துக்களை கேட்காவிட்டால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட ஒரு சமுதாயமாக மாறும் நிலையில் அவர்கள் தற்கொலைகளை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

அதேபோல் அதிகளவான மதுபாவனை, அதிகளவான போதைவஸ்து பாவனை எமது சமூகத்தில் அதிகமாக காணப்படுகின்றது. அதுவும் தற்கொலைகளை கூட்டுவதற்கு ஒரு காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. மது மற்றும் போதைவஸ்துக்களை பயன்படுத்தும் இளம் பராயத்தினர் அவைகளை தவிர்க்க முயல வேண்டும்.

வவுனியா பொது வைத்தியசாலையில் தற்கொலைகளுக்கு எதிராக இரண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. ஒன்று வைத்தியசாலையின் உளவள வைத்திய நிபுணரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. மன அழுத்தத்தின் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு வந்து மருந்து எடுத்துச் சென்றவர்களின் வீடுகளிற்கு சென்று அவர்களின் பிரச்சினைகளை கண்டறிந்து தீர்வுகளை வழங்கி வருகிறார்கள்.


அதேபோல் வைத்தியசாலையில் பாடசாலை மாணவர்களுக்காக தற்கொலைக்கு எதிரான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துள்ளோம்

அதில் போதைவஸ்து பாவனை மற்றும் மதுபாவனையை எவ்வாறு குறைக்க முடியும். சமூகச் சீரழிவிலிருந்து பாடசாலை சமூகத்தை எப்படி பாதுகாக்க முடியும் என்ற வகையில் ஒவ்வொரு வாரமும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம்.

அதேபோல் சமூக சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் மற்றும் வலயக்கல்வி பணிமனை ஊடாக பல மட்டங்களில் தற்கொலைகளை தடுப்பதற்குரிய நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தியுள்ளனர்.

அத்துடன் ஆசிரியர் சமூகமானது பாடசாலை மாணவர்களின் பிரச்சினைகளை கருத்தில் எடுக்க வேண்டும். மாணவர்களை அழுத்தத்திற்கு உட்படுத்தாமல் அவர்களை நல்லவிதமாக கையாள வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாக இருக்கிறது. பாடசாலை மாணவர்களை உங்கள் சொந்தப் பிள்ளைகள் போல் கவனித்து அவர்களை வழிநடத்த வேண்டும். ஏனென்றால் இவ்வாறாக தற்கொலைகள் அதிகரித்து செல்லுமானால் எமது சமூகம் வினைத் திறனில்லாத சமூகமாக நாளடைவில் மாறிவிடும். எனவே அனைத்து சமூகத்தினரும் இணைந்து தற்கொலைகளை தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தெரிவித்தார் (2-15-250)

# கொழும்பு மாநகர சபையின் பதில் ஆணையாளராக லலித்



(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் பதில் ஆணையாளராக பொறியாளர் லலித் விக்கிரமரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் கே.பி. லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர ஆணையாளராக இருந்த வீ.கே.ஏ. அனுரவை பதவி நீக்குமாறு மேல் மாகாண ஆளுநர் கே.பி. லோகேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

மீதொட்டமுல்லை குப்பை மலை விபத்து தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையில், முக்கியமான ஐந்து அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமையில் இருந்து தவறியிருப்பதன் காரணமாக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களுக்கு அமைய கொழும்பு நகர ஆணையாளரின் பதவியை பறித்து ஆளுநர் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் கொழும்பு மாநகர சபையின் பதில் ஆணையாளராக லலித் விக்கிரமரத்ன நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தூயசக்தி தொழில்நுட்ப விழிப்புணர்வு கருத்தரங்கு

வளர்ந்துவரும் விஞ்ஞான உலகில் தூய சக்தி முதல்களின் பாவனையையும் அவற்றின் தேவையையும் இன்றைய எம் பாடசாலை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமான தொன்று. இதனைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், வட மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து யாழ். மற்றும் மேற்கு நோர்வே பல்கலைக்கழகங்களின் (Western Norway Univer sity of Applied Sciences) அனுசரணையுடன் வடமாகாண 1AB பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 8முதல்11 மற்றும்க.பொ.த. (உ/த) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறை சார்ந்த மாணவர்களுக்குத் தூய சக்தி தொழில்நுட்பம் தொடர்பான விழிப்பு ணர்வுக் கருத்தரங்கொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக மார்ச் 6 முதல் 14 வரையான காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 பாடசாலைகளில் 10 செயல மர்வு களாக இக்கருத்தரங்கானது நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 70 மாணவர்களின் பங்குபற்றலுடன் ஏறத்தாழ 3500 மாணவர்கள்இக்கருத்தரங்கின் மூலம் பயன்பெறவுள்ளனர். இம்மாணவர் கருத்தரங்கானதுதூயசக்திதொழில்நுட்பம் தொடர்பான விரிவுரைகள், காணொலி விளக்கங்கள், உபகரணங்களுடான செய்முறை விளக்கங்கள் மற்றும் உபகரணக் கையாள் கையூடான கற்றல் விளக்கங்கள் போன்றவற்றைக்கொண்டிருக்கும். இக்கருத்தரங்கின் இறுதியில் பங்குபற்றிய மாணவர்களுக்கிடையில் தூய சக்தி தொழில்நுட்பம் சார்ந்த பல் தேர்வுப் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு மே மாதத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் பரிசில்களும் வழங்கப்படும்.

அடுத்தகட்ட நடவடிக்கையாக இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கானது வடமாகாணத்தில் ஏனைய மாவட்டங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர், வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடனும் யாழ். மேற்கு நோர்வே பல்கலைக்கழகங்களுடனும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். இச்செயற்றிட்டம் இலங்கைக்கான நோர்வே தூதரகத்தின் நிதியுதவியின் கீழ் நடத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சிரியா மண்ணே சிரி



குருதித் துளி சொட்டுகிறது,
மழை அறியா சிரியா வானம்...
இப்போது இது என்தேசம் என்கிறது
மேகங்களை நாடுகடத்தி
ஆகாயங்கள் கைப்பற்றிய கரும்புகை..
கருக்குழியில் வளர்த்த சிசுக்களை
பதுங்கு குழியில் பாதுகாக்கிறார்கள்
தங்கள் கற்பை போல தாய்மார்கள்!
சாந்தியும் சமாதானமும் நிலவகூறும்
பிரார்த்தனை குரல்... நசுங்கி போகிறது
குழந்தைகள் கதறும் கூட்டோசையில்...
மீட்டெடுத்த சிறார் உடம்பில் பாதி மாமிசம்.
பதுங்கு குழிகளில் மீதி மாமிசம்!
இரசாயன இறைச்சி உண்டதில்
இறந்து கிடந்தனர் பறந்த கழுகுகள்!
வீடுகள் கொங்கிறீட் கல்லறைகளாவதும்...
வீதிகள் உடல்களின் குப்பைத்தொட்டிகளாவதும்...
சாப்பாட்டு மேசைகளில்
பிணாங்கள் பரிமாறப்படுவதும்
அதிராத குரல்களில் உரையாடப்படுகின்றனர்
ஐ.நா-வின் தேநீர் இடைவெளிகளில்!
எலும்புக்கூடுகளில் எது சன்னி? எது ஷியா?
தோண்டிய தோட்டாக்களில்
எது அமெரிக்கா? எது ரஷ்யா?
எரியும் நெருப்பில் எது சவுதி? எது கொரியா?
ஆயுத சூதாடிகளின் வங்கிக் கணக்கு நிறைவது
பணத்தினால் இல்லை பிணத்தினால்.
கபால கோப்பைகளில் ஒயின் பருக முடியாது.
போரும் மரணமும் எவ்வடிவிலும் அழகில்லை..!
வழியும் குருதியும் எவ்வுடம்பிலும் சுகமில்லை...!
அழுத குழந்தையே பால் குடிக்கும் என்றால்
அமைதி பால் எங்கே?
எல்லா நாடுகளின் மார்பிலும் சமாதானம் நிலவட்டும்.
சிரியா மண்ணே சிரி!
வழியும் குருதியே வழி!
ஒழியா போரே ஒழி!

கவிப்பேரரசு
வைரமுத்து

## முஸ்லிம் இளைஞர்களின் தாக்குதலில் சிங்கள இளைஞன் மரணம்

# முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்க தபால் அமைச்சர் ஹலீம் கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம் இளைஞர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி சிங்கள இளைஞன் ஒருவர்.உயிரிழந்துள்ளதால் அவரது உடல் தகனம் செய்யும் வரையிலும் தற்போது முஸ்லிம் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைக் கருத்திற்கொண்டு திகன, கெங்கல்ல, உன்னஸ்கிரிய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும்படி கண்டி பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த ஏக்கநாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக முஸ்லிம் சமய, கலாசாரம் மற்றும் தபால்துறை அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்தார்.

"வாகனம் ஒன்றை பின் நோக்கி எடுக்கும் போது ஆட்டோவில் மோதி பக்க கண்ணாடி உடைந்த சம்பவத்தில் ஏற்பட்ட கைகலப்பினால் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த சிங்கள இளைஞனின் சம்பவத்தைத் தொடர்ந்து தெல்தெனிய, மெதமஹநுவர, திகன , உடிஸ் பத்துவ, கெங்கல்ல, உன்னஸ்கிரிய ஆகிய பிரதேசங்களில் நிலவி வரும் பதற்ற சூழ்நிலையைக் கவனத்திற்கொண்டு கண்டி பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த ஏக்கநாயக்கவிடம் முஸ்லிம் பிரதேசங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வேண்டிக் கொண்டதாக அமைச்சர் தெரிவித் தார்.


இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையே ஒற்றுமையை சீர்குலைக்க சிலர் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். சமாதானத்துடன் முடிவடைந்த பிரச்சினையை மேலும் இனவாத ரீதியாகவும் அரசியலாகவும் முன்னெடுக்க சில தீய சக்திகள் முற்பட்டு வருகின்றன. இன மதம் பாராமல் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து பாரிய அசம்பாவிதங்கள் எவையும் நடைபெறாமல் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்துள்ளப்பட்டுள்ளார்கள். எனினும் சில அசம்பாவிதங்கள் நடைபெற்ற போதிலும் பதற்றத்தை உருவாக்க முனைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 11 சந்தேக நபர்களுடன் இரு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அம்பால என்ற இடத்தில் இருந்து திகன நகர் வரையிலும் உடலை ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் நகருக்கு கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கப் போதில்லை என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் பொறுமையுடனும் புத்திசதுரியமாகவும் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆட்டோவுடன் ஒருவர் எரித்துப் படுகொலை!

## மூவர் கைது



(கொழும்பு)

தனமல்வில - கொம லிகம் பிரதேசத்தில் ஆட்டோவுடன் நபரொருவர் தீ வைத்து படுகொலை செய்ய ப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந் தேக நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

நிலத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம் பெற் றதாக சந்தேக நபர்கள் பொலி ஸாரிடம் வாக்கு மூலம் வழங்கியுள்ள னர்.

ஒரு சந்தேக நபர் கடந்த 3ஆம் திகதி சரணடைந்த நிலையில், ஏனைய இரண்டு சந் தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி இக் கொலைச் சம்ப வம் இடம்பெற்றது.

தனமல்வில பிரதேசத்தை சேர்ந்த 52 வயதான நபரே இவ்வாறு கொலை செய் யப்பட்டவர் என் பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மஹாபொல சலுகை மறுக்கப்பட மாட்டாது

(கொழும்பு)

மஹாபொல அல்லது ஏனைய புலமைப்பரிசில் நிதியுதவிக்கு உரித்தான எந்தவொரு மாணவருக்கும் அந்த சலுகை மறுக்கப்படமாட்டாது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்பேராசிரியர்மொஹான் டீ சில்வா இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்த பீடங்களில் உள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு இந்த மாதத்தில் வழங்கப்படும்.கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 60 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 63 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 50 | 70 | 80 | 50 |
| தக்காளி | 20 | 20 | 25 | 30 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 50 | 50 | 50 | 70 |
| கரட் | 80 | 100 | 70 | 120 | 160 | 80 |
| பூசணி | 60 | 40 | 40 | 40 | 80 | 50 |
| புடோல் | 80 | 60 | 30 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 130 | 140 | 80 | 120 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 110 | 120 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 65 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 60 | 100 | 40 | 60 | 80 | 90 |
| லீக்ஸ் | 150 | 160 | 120 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 30 | 60 | 30 | 50 | 80 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 65 | 120 | 100 | 180 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 400 | 600 | 800 | 600 |
| போஞ்சி | 80 | 120 | 70 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 50 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 30 | 50 | 80 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 35-90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 160 | 135 | 160 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 70 | 100 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 80 | 30 | 60 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | 100 | 70 |







யாழ்.கோண்டாவில் இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை உப அதிபர் இராமலிங்கம் அருணகிரிவாசனின் மணிவிழா நிகழ்வுகள் ஆசி மட விநாயகர் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

# கண்டியில் களேபரம்
# ஊரடங்கு சட்டம் அமுல்



(கண்டி)

கண்டி மாவட்டத்தில் நேற்று ஏற்பட்ட அசாதாரண நிலையை அடுத்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

உடன் அமுலாகும் வகையில் கண்டி நிர்வாக மாவட்டத்தில் இன்று காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி தெல்தெனிய பிரதேசத்தில் பாரவூர்தியில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவரை ஆட்டோவில் வந்த சிலர் வழிமறித்துத் தாக்கினர்.

இதன்போது தாக்குதலுக்கு உள்ளானவர் பலியானார்.

தாக்குதல் சம்பவத்தில் பலியானவரின் ஆதரவாளர்கள், தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கு சொந்தமான வர்த்தக நிலையம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் தீ மூட்டியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதையடுத்து அப்பகுதியில் பதற்றநிலை தொடர்ந்துள்ளது. இதில் மற்றுமொரு வர்த்தக நிறுவனத்திற்கு நேற்று முன்தினமிரவு தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 24 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், சம்பவத்தில் உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற திட்டமிட்ட நிலையில் குறித்த பகுதிக்கு பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் மக்கள் மீது கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், உடன் அமுலாகும் வகையில் கண்டி நிர்வாக மாவட்டத்தில் இன்று காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன். அதை ஆங்கொரு மரப்பொந்திடை வைத்தேன். வெந்து தணிந்தது காடு. ~ மகாகவி பாரதியார்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## இன வன்மச் சேற்றில் இருந்து இலங்கை மீள்வது எப்போது?

காலத்துக்கு காலம் இலங்கையில் நடக்கும் இன வன்மச் செயல்கள் அழகான இலங்கைத் தீவைப் பாழாக்கி வருகிறது.

உலகின் சிறிய நாடான இலங்கையில் மூவின மக்களே வாழ்கின்றனர். மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான கட்டமைப்புக்கள் இந்நாள்வரை உருவாக்கப்படவில்லை என்பது மிகத் தெளிவான உண்மை.

அண்மையில் அம்பாறையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் சிங்களத் தரப்புகள் மேற்கொண்ட வன்செயலைத் தொடர்ந்து நேற்று கண்டியில் சிங்கள – முஸ்லிம் மக்களிடையே வன்செயல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இன்றிருக்கக்கூடிய நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ஊடாக வன்செயல் சம்பவங்கள் நேரடியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, இதயம் கருகி விடும் போல் உள்ளது.

அந்தளவுக்கு இன வன்மம் வேகம் கொண்டெழுந்ததைப் பார்க்க முடிந்தது.

இத்தகைய வன்செயல்கள் எந்த நேரத்திலும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவு கொள்ளும் என்பதுடன் கோடிக் கணக்கான பெறுமதியுடைய சொத்துக்களையும் நாசம் செய்துவிடும்.

எனவே வன் செயலுக்கான காரணம் என்ன? என்ற கேள்விக்கு முன்பாக, தனி மனித அல்லது குழுநிலையிலான சண்டை சச்சரவுகள் விடயத்தில் பொலிஸ் தரப்பும் நீதிபரிபாலனமும் மிகவும் இறுக்கமாகச் செயற்படுவது கட்டாயமானதாகும்.

இனப்பாகுபாடு சார்ந்த தனி மனித அல்லது குழுநிலையிலான மோதல் சம்பவங்கள் அல்லது தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரும் நீதிபரிபாலனமும் எடுக்கின்ற நடவடிக்கைகள் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருப்பது அவசியம்.

இல்லையேல் பாதிக்கப்பட்ட தரப்பு தானே தண்டனை வழங்க முற்படும்.

இத்தகைய நிலைமை மிகவும் ஆபத்தானது என்பதுடன் இத்தகைய சம்பவங்களே இன வன்மத்துக்கு வழிவகுப்பதாகவும் இருக்கின்றன.

ஆகையால் இன, மத, மொழி பேதமின்றி பொலிஸாரும் நீதிபரிபாலனமும் செயற்படுவதை உறுதி செய்வது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

அதேநேரம் இன வன்மங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை அறவே துடைத்து எடுப்பதன் பொருட்டு இன நல்லுறவு அமைப்புக்களை நாடு பூராகவும் உருவாக்குவதுடன் இன வன்மத்துக்கு எதிராகக் கடும் தண்டனை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் கண்டியில் ஏற்பட்டுள்ள சிங்கள – முஸ்லிம் வன்செயல் உடனடியாக தடுக்கப்படுவதற்கான அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்படுவதுடன்,

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடுகளும் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

### பொது பல சேனாவின் ஞானசார தேரர்

# வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த நீதிமன்றத் தடையுத்தரவு தற்காலிக அடிப்படையில் நீக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் புத்திக்க ஸ்ரீ ராகல நேற்று தற்காலிக அடிப்படையில் தடையுத்தரவினை நீக்கியுள்ளார்.

ராஜகிரிய நாவல வீதியில் வீதிச் சோதனைச் சாவடியில் போதைப் பொருள் தடுப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதாகவும், அச்சுறுத்தியதாகவும் ஞானசார தேரர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இன்று 6ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையில் ஜப்பானின் சுகுபா சம்போதி விகாரையில் நடைபெறவுள்ள தர்ம உபதேச நிகழ்வில் பங்கேற்பதற்காக அனுமதிக்குமாறு ஞானசார தேரர், சட்டத்தரணிகள் ஊடாக கோரியிருந்தார்.

தற்காலிக அடிப்படையில் ஞானசார தேரருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையை நீதிமன்றம் நீக்கியதுடன், அது குறித்து குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. (ம)

## மாணவர்களுக்கு டெப், மடிக் கணினி விரைவில் வழங்கப்படும் – கல்வி அமைச்சர்

டெப் மற்றும் மடிககணினி வழங்கும் வேலைத்திட்டங்கள் சில காரணங்களால் தடைப்பட்டுள்ளன. எவ்வாறேனும் அப்பணியை நிறைவு செய்வோம் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமக்கு அமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டதன் பின்னர் கல்வி அமைச்சு மற்றும் கல்வி செயற்பாட்டுக்குரிய சிறப்புத்தன்மையினை மேலும் விருத்தி செய்வதனையே முதல் நடவடிக்கையாக மேற்கொண்டோம்.

அதன் முதற்கட்டமாக கல்வி நிர்வாக சேவையில் காணப்பட்ட 852 என்கிற பற்றாக்குறை நிலையினை சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுத்தோடு, புதிதாக நான்காயிரம் அதிபர்களை நியமிப்பதற்கும் ஆயிரத்து நூற்றுத்தொண்ணூறு ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தோம்.

மேலும் முக்கியமாக ஆறாம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மடிக்கணினிகளை வழங்குவதற்கான அனைத்து பணிகளும் நிறைவடைந்துள்ளன.

அதேதோடு உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு லட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்துக்கும் அதிகமான டெப் வழங்கும் வேலைத்திட்டங்கள் நிறைவெய்தியுள்ள நிலையில், சில காரணங்களால் அப்பணிகள் தடைப்பட்டுள்ளன.

அப்பணிகளை வெகுவிரைவாக நிறைவு செய்வோம் என அவர் தெரிவித்தார். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீடு கட்டும் வேலையைத் தொடங்க எந்த நட்சத்திரத்தில் கிரகங்கள் இருக்க வேண்டும்?**

சுக்ரன்: கேட்டை 4 பாதங்கள், சதயம் 4 பாதங்கள், அச்சுவினி 4 பாதங்கள், அவிட்டம் 4 பாதங்கள், திருவாதிரை 4 பாதங்கள், சித்திரை 4 பாதங்கள், பூராடம் 4 பாதங்கள்.

இந்த நட்சத்திரக் காலில் சுக்ரன் சஞ்சாரம் செய்யும் போது வீடு கட்டத் தொடங்கினால் விரைவில் வீடு முழுமையடையும்.

சனி: கேட்டை 4 பாதங்கள், சுவாதி 4 பாதங்கள், அவிட்டம் 4 பாதங்கள், உத்தரட்டாதி 4 பாதங்கள், பூரட்டாதி 4 பாதங்கள், பரணி 4 பாதங்கள், அனுசம் 4 பாதங் கள், சதயம 4 பாதங்கள். இந்த நட்சத்திரக் கால்களில் சனிப்பிரவேசம் செய்யும் போது வீடு கட்டுதல் கூடாது.

இராகு, கேது: இராகு கேது சஞ்சாரம் செய்யும் நட்சத்திரத்தில் இருந்து அதன் பதின்னான்காவது நட்சத்திரத்தில் வீடு கட்டக்கூடாது. உதாரணமாக ஸ்ரீ இராகு பகவான் சதயத்தில் சஞ்சாரம் செய்வதாக கொள்வோம். மகம் நட்சத்திரத்தில் வீடு கட்டக் கூடாது. (தொடரும்)

## மட்டக்களப்பு ஏறாவூரில் விபத்து 3 மாணவர்கள் படுகாயம்

மட்டக்களப்பு - ஏறாவூர் நெடுஞ்சாலையில் சித்தாண்டியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் மூன்று மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்னாலுள்ள பிரதான நெடுஞ்சாலையை மாணவர்கள் கடக்கும்போது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இம் மாணவர்கள் மீது மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 11 வயது மற்றும் 14 வயதுடைய இரு மாணவிகளும் ஒரு சிறுவனும் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, படுகாயங்களுக்குள்ளான அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மோ.சைக்கிள் - கார் விபத்து ஒருவர் படுகாயம்

மோட்டார் சைக்கிளும் காரும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரில் இருந்து ஏ9 வீதி ஊடாக பயணித்த கார், முன்னே சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.


இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நொச்சிக்குளத்தை சேர்ந்த ராமன் ஆறுமுகம் (வயது-55) படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்றது. (ம-250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குளாய், ஆழிய வளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில சாளம்பைக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நாம் முன்னேற முதலில் நம்மிடம் நம்பிக்கை வேண்டும். பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன் கடவுளிடமும் நம்பிக்கை வைக்க முடியாது.
- உள்ளத்துக்குள் இருக்கும் அனைத்தையும் துறந்துவிடு, வைராக்கியத்தைக் கடைபிடி, இதுவே உண்மையான தியாகம். இது இல்லாமல் உனக்கு ஆன்மிகம் கிடையாது.
- உள்ளம் தூய்மையானால் உலகமும் தூயதாகிவிடும். இந்த உண்மையை உலகுக்கு கூற வேண்டிய அவசியம், முன்பு என்றும் இல்லாத அளவுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது.
- கல்வி, அறிவு, செல்வம், ஆள்பலம், வலிமை, தைரியம் என்று இயற்கை நமக்கு கொடுத்திருக்கின்ற அனைத்தும், பிறருக்குக் கொடுப்பதற்குத்தான்.
- வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்களைக் கவனி. ஒவ்வொருவரின் பின்னணியிலும் அளவற்ற கடமையுணர்வும் நேர்மையும் இருந்தே தீரும்.
- ஆன்மிகத்திற்கு ஜாதியில்லை. ஜாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடுதான்.

# வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி முடிவுகள்

வடமராட்சி பாடசாலைகளுக் கிடையிலான சதுரங்க சுற்றுப் போட்டி-2018 பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரியில் கடந்த சனிக் கிழமை நடை பெற்றது. 20 வயதின் கீழ் ஆண்கள்/பெண்களும் 17 வய தின் கீழ் ஆண்கள்/ பெண்கள் என குழுப் போட்டியாக நடைபெற்ற இந் நிகழ்வு வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வக்குமரன் தலை மையில் நடைபெற்றது.

20 வயதின் கீழ் ஆண்கள் பிரி வில் 1ஆம் இடத்தை யாழ். ஹாட்லிக் கல்லூரியும் 2 ஆம் இடத்தை யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியும் 3 ஆம் இடத்தை யாழ். உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

20 வயதின் கீழ் பெண்கள் பிரி வில் 1 ஆம் இடத்தை யாழ். மெத டிஸ் உயர்தர பாடசாலையும் 2 ஆம் இடத்தை யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் 3 ஆம் இடத்தை யாழ். வட இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

17 வயதின் கீழ் ஆண்கள் பிரி வில் 1ஆம் இடத்தை யாழ். ஹாட் லிக் கல்லூரியும் 2 ஆம் இடத்தை யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி யும் 3 ஆம் இடத்தை யாழ்.குடத் தனை G.T.M.S (அ.த.க.பா) பெற்றுக் கொண்டன.

17 வயதின் கீழ் பெண்கள் பிரி வில் 1 ஆம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் 2 ஆம் இட த்தை யாழ்.மெதடிஸ் பெண்கள் உயர் தர பாடசாலையும் 3 ஆம் இடத்தை யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இப் போட்டியின் பிரதம நடு வராக ஆ. கோகுலராஜனும் நடு வர்களாக தி. இராஜசிங்கம், கபி லானந் , தி. இராஜசிங்கம், நிதர் ஷனா , மயூரி ஆகியோர் கடமை யாற்றினர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பூப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டி, மட்டக்களப்பு பூப்பந்தாட்ட சங்கத்தின் வெட்டுக்காடு உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் என். மதிவண்ணன், மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே. ஈஸ்பரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு போட்டியினை ஆரம்பித்து வைத்தனர். இப்போட்டியில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங் களிலிருந்து வருகை தந்திருந்த அந்தந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவ ப்படுத்திய ஆண், பெண் அணியினர் கலந்துகொண்டனர்.

இடம்பெற்ற இறுதிச்சுற்றில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆண், பெண் ஆகிய இரு அணியினரும் முதலாம் இடத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே. ஈஸ்பரன் தெரிவித்தார். (க)

# கொக்குவில் ம.ச.ச.நிலையத்தை வென்று கிண்ணத்தைப் பெற்றது ஓல்ட்கோல்ஸ்



**நிரோசனின் இறுதி ஓவர் சிக்கனமான பந்துவீச்சால், ஓல்ட் கோல்ஸ் ஒரு ஓட்டத்தால் திரில் வெற்றி பெற்றது. மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகத்தின் பிரித்தானிய கிளையின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் அணிக்கு 10 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது நடைபெற்றது.**

மானிப்பாய் பரிஸ், திருநெல் வேலி வை.எம்.எச்.ஏ, சாவகச்சேரி ரிறிபேக், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ஸ், தெல்லிப்பழை யூனி யன்ஸ், கொக்குவில் மத்திய சனச மூக நிலையம் ஆகிய அணிகள் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியில் இறு திப்போட்டிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ஸ் அணி மோதியது. இறு திப்போட்டியானது 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய



ஓல்ட்கோல்ஸ் அணி, பி.சிறிகு கனின் அதிரடியான துடுப்பாட்டத் தின் உதவியுடன் 10 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 86 ஓட்ட ங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பி.சிறிகுகன் 49, எஸ்.நிரோசன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் அணி சார்பாக, எம்.நிமலதாஸ் 2 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும், ரி.சத்தியன் 2 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும், ஜெயரூபன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

87 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி யென்ற இலக்குடன் பதிலளித்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, இறுதி ஓவரில் 5 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலை யில், 3 வீரர்கள் ரன்அவுட் ஆனார் கள். 10 ஓவர்கள் நிறைவில் அனை த்து விக்கெட்களையும் இழந்து 85 ஓட்டங்களை மாத்திரம் கொக்கு வில் மத்திய சனசமூக நிலைய அணியினர் பெற்றனர். துடுப் பாட் டத்தில் ஜனுதாஸ் 36 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணியின் கே.நிலுக்சன் 2 ஓவர் கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும், எஸ்.நிரோசன் 2 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங் களுக்கு 1 விக்கெட்டையும், பிரிய லக்சன், ஜிந்துசன், சிறிகுகன் ஆகியோர் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் சிறப் பாட்டக்காரராக எஸ்.நிரோசன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# விறுவிறுப்பானது இறுதியாட்டம் மானிப்பாய் இந்து போய்ஸ் வெற்றி



மானிப்பாய் பரிஸ் விளையாட் டுக்கழகத்தின் பிரித்தானிய கிளை யின் ஏற்பாட்டில், அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்து சார்பில் பங்கு பற்றிய அணி சம்பியனாகியது.

இந்தச் சுற்றுப்போட்டியில் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம், நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம், இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் மானிப்பாய் இந்து போய்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகள் பங்குபற்றியிருந்தன.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு மானிப்பாய் இந்து போய்ஸ் மற்றும் சென். லூட்ஸ் அணிகள் தகுதி பெற்றன. இறுதிப்போட்டி, கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களை யும் பதிவு செய்யவில்லை. இரண் டாம் பாதியாட்டத்தில் மானிப்பாய் இந்து போய்ஸ் அணியினர் கோல் ஒன்றைப் பதிவு செய்தனர். முடி வில், மானிப்பாய் இந்து போய்ஸ் அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர். (க-26)

# உடுவில் மகளிருடன் மோதி சம்பியனானது சண்டிலிப்பாய் இந்து



மானிப்பாய் பரிஸ் விளையாட் டுக்கழகத்தின் பிரித்தானிய கிளை யின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.

இச் சுற்றுப்போட்டியில் சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி மற்றும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணிகள் பங்குபற்றின.

சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் தகுதி பெற் றன.

இறுதிப்போட்டி 3 ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் கிறீன் மெமோரியல் வைத்தியசாலை வலைப்பந்தாட்ட திடலில் நடை பெற்றது.

இதில், சண்டிலிப்பாய் இந்து அணி, 30:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பிய னாகியது. (க-26)

# வலயமட்ட எல்லே போட்டி சாவகச்சேரி இந்து சம்பியன்



தென்மராட்சி பாடசாலைகளு க்கு இடையிலான வலய மட்ட எல்லே போட்டியில் சாவகச்சேரி இந்து அணியினர் வரணி மத்திய கல்லூரியை இறுதியாட்டத்தில் வீழ்த்தி தொடர்ந்து [illegible] வருடங்களாக சம்பியனாக தெரிவாகியது. 02.03.2018 அன்று வரணி மத் திய கல்லூரியில் இடம்பெற்ற போட்டிகளில் 8 பாடசாலை அணி கள் பங்குபற்றின. இறுதி ஆட் டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வரணி சென்றல் கள தடுப்பை தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்து அணியினர் 40 பந்துகளில் 12 ஓட் டங்கள் எடுத்தனர். பின்னர் துடுப் பெடுத்தாடிய வரணி சென்றல் அணி யினர் 3 ஓட்டங்கள் பெற 9 ஓட்டங் கள் வித்தியாசத்தில் சாவகச்சேரி இந்து அணியினர் சம்பியனாகினர். (க)

## முஸ்லிம்களை...

அமைச்சர் ஹக்கீம் தற்போது கண்டி நோக்கி விரைந்துள்ளதாக அவரது ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

சிங்கள சகோதரர் ஒருவர் மரணித்துள்ள பினனணியில், அதைக் காரணமாக கொண்டு முஸ்லிம்களை மையப்படுத்தி இனக் கலவர மொன்றை உருவாக்கும் நோக்கத்தில் இனவாத சக்திகள் அங்கு ஒன்று சேர்ந்துள்ளன என ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், நிலைமையை நேரில் ஆராய்ந்து உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அமைச்சர் அங்கு விரைந்துள்ளார்.

இதேவேளை, சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவை தொடர்புகொண்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணித்ததாக அமைச்சரின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

எனினும், சம்பவ இடத்தில் விசேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு உரிய வேளையில் களமிறக்கப்படவில்லையென குற்றஞ்சாட்டியுள்ளார்.

கண்டியில் உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அங்கு தொடர்ந்தும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## கண்டியில் பாதுகாப்பை...

தரப்பினருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த ஆலோசனையை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் பிரதேசத்தின் அனைத்து மக்களினதும் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகளை தவிர்த்துக்கொள்வதற்காக அனைத்து தரப்பினருடனும் இணைந்து பொறுப்புடன் செயலாற்றுமாறு பாதுகாப்பு தரப்பினரை ஜனாதிபதி மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

பிரதேசத்தில் அமைதியை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## பொன்சேகாவுக்கு...

கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிப்பதற்கு ஏற்கெனவே ஜனாதிபதியிடம் பரிந்துரைக்கப்பட்டது. எனினும், குறித்த அமைச்சுப் பதவியை பொன்சேகாவுக்கு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

எனினும், சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பொறுப்பை கையேற்க ஐக்கிய தேசியக் கட்சியின் வேறு எந்த உறுப்பினரும் முன்வரவில்லையென தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, குறித்த அமைச்சுப் பொறுப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்காலிகமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

எனினும், பிரதமர் இந்த அமைச்சை பொறுப்பேற்றமை தொடர்பாகவும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், சரத் பொன்சேகாவின் பெயரை மீண்டும் பரிந்துரைக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவை மறுசீரமைப்பின்போது சரத் பொன்சேகா நாட்டில் இல்லாத காரணத்தால் பிரதமர் ரணில் அந்த அமைச்சுப் பொறுப்பை கையேற்றதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## கண்டியில் பதற்றம்...

யம் ஒன்றின் சி.சி.டிவி கமெராக்களில் பதிவாகி இருந்தன.

## சிறுவனை கொலை செய்த நபருக்கு விளக்கமறியல்

சிலாபம் -இரணவில பகுதியில் 10 வயது சிறுவனை கொலை செய்த நபர் மார்ச் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு சிலாபம் நீதவான் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

10 வயதான சுசித் நிர்மல் என்ற சிறுவனை கடத்திச் சென்று துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலை செய்த சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

ஜூட் பொன்சேகா எனும் சந்தேக நபரே முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நயாரு மீன்பிடி கிராமத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு அறிக்கை பிரதமர் ரணிலிடம் கையளிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியை பூரண மறுசீரமைப்பு செய்யும் நோக்கில், யோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையில் அலரிமாளிகையில் நேற்று ஐக்கிய தேசிய கட்சியின் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது குறித்த அறிக்கை பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தலைமையிலான இந்த குழுவில், அமைச்சர்களான சாகல ரத்நாயக்க, அகில விராஜ் காரியவசம் மற்றும் இராஜாங்க அமைச்சர் அஜித் பெரேரா ஆகியோர் உள்ளடங்கி இருந்தனர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர், ஐக்கிய தேசிய கட்சியை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்ற வலியுறுத்தல்கள் அதிகரித்த நிலையில், பிரதமரால் இந்த குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மைத்திரியை இரகசியமாக சந்திக்கும் அவசியமில்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இரகசியமான முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க வேண்டிய அவசியமில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெற்கின் ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு பகிரங்கமாக பணியாற்ற மளவிற்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ள நிலையில் இரகசியமான முறையில் ஜனாதிபதியை சந்தித்து, மக்களின் ஆணையை இழிவுபடுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் இரகசிய சந்திப்பு நடத்த வேண்டிய அவசியம் எதுவும் இதுவரையில் எழவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் இரகசிய சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. (ம)

# கண்டி திகன பிரதேசத்திற்கு அமைச்சர் ஹக்கீம் விஜயம்



(கண்டி)

கண்டி, திகன பிரதேசத்தில் கலகக்காரர்களினால் சேதமாக்கப்பட்ட முஸ்லிம்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல் போன்ற இடங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

கண்டி மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் தொடரும் தாக்குதல்களினால் முஸ்லிம்கள் அச்சத்தில் உள்ளனர். இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து, இராணுவத்தினர் களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட முஸ்லிம்களை நேரில் சந்தித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முஸ்லிம்கள் எவ்வித அசம்பாவிதங்களில் ஈடுபடாமல் அமைதி காக்குமாறும் வேண்டிக்கொண்டார்.

பொலிஸ் நிலையத்துக்கு நேரடியாகச் சென்ற அமைச்சர் ரவூப் ஹக்கீம், அங்குள்ள உயரதிகாரிகளுடன் பேசி முஸ்லிம் பிரதேசங்களில் இரவுநேர தாக்குதல் நடைபெறாத வண்ணம் சந்திகளில் பொலிஸாரை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். (ம)

# கண்டி திகன, தெல்தெனியவில் வன்முறையில் ஈடுபட்ட 24 பேர் பொலிஸாரால் கைது

(கண்டி)

திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் நேற்றுக் காலை முதல் அசாதாரண செயற்பாட்டை வெளிப்படுத்தியவர்களுள் 24 பேர் தெல்தெனிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

2000 இற்கும் அதிகமானவர்கள் நேற்று நண்பகல் வேளை திகன நகர் மற்றும் தெல்தெனிய ஆகிய பகுதிகளுக்கு பலவந்தமாக பிரவேசித்து முஸ்லிம்களின் மதஸ்தலங்கள், முஸ்லிம்களின் கடைகள் மற்றும் முஸ்லிம்களின் வீடுகள் பலவற்றுக்கு சேதம் விளைவித்துள்ளனர்.

இவ்வாறு கலகம் ஏற்படும் விதத்தில் செயற்பட்டவர்களை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் தண்ணீர்ப் பிரயோகம் என்பனவற்றைப் பிரயோகித்துள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இத்தகையவர்கள் வன்முறையில் ஈடுபட்டு பாதையில் வரும் வாகனங்களுக்கும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தெல்தெனிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் 10 பேர் பல்லேகலை பொலிஸ் நிலையத்திலும், 14 பேர் மெனிக்ஹின்ன பொலிஸ் நிலையத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் பலர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ம)

தாக்குதலுக்கு உள்ளானவர் தெல்தெனியா ஆதார மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தார்.

அவரது இறுதிக்கிரிகை தெல்தெனிய அம்பாலை பிரதேசத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் 4 பேர் தெல்தெனிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் நேற்றையதினம் தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை நாளை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தை முன்னிறுத்தி பிரதேச வாசிகள் சிலர் நேற்றுமுன்தினம் இரவு தெல்தெனிய நகரில் அமைதியற்ற முறையில் செயற்பட்டுள்ளனர்.

இதன்போது நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றின்மீது தாக்குதல் நடத்தியுள்ளதுடன், அவற்றுக்கு தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் இதுவரையில் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் நேற்று மதியம் சிலதரப்பினர் திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் மீண்டும் அமைதியைக் குழப்பும் வகையில் செயற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில், கண்டி நிர்வாக மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று காலை 6 மணி வரையில் ஊரடங்கு சட்டத்தை அமுலாக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (ம)

## மட்டக்களப்பு...

மையிலேயே தெல்தெனிய பொலிஸ் நிலையம் முன் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. கண்டி, திகனயில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த நபர் மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி சுமண ரத்ன தேரரின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சிறைச்சாலைக்கு...

செய்யப்பட்டுள்ளார். இதில் மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள தனது மாமாவை பார்வையிடுவதற்காக உணவுப் பொருட்களை கொண்டு சென்றுள்ளார்.

இதன்போது இளைஞன் கொண்டு சென்ற பொதியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சோதனையிடும் போது அதிலிருந்து 100 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இவர் மிகவும் நூதனமான முறையில் உணவுப் பொருட்களுடன் கஞ்சாவை மறைத்து வைத்து கொண்டு சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதையடுத்து குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் போது அவர் மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர் என தெரியவந்துள்ளது. இது தொடர்பில் யாழ்.பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ம-4-9)

## தொடருந்துடன்...

த்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மாரிமுத்து நாகராசா (வயது 36) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தொடருந்துடன் மோதியே அவர் உயிரிழந்துள்ளார்.

பரந்தன் - உமையாள்புரம் செல்லும் வீதியிலுள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையை மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பத்தலைவர் கடந்து செல்ல முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-15-312-315)

## சீமெந்தின் விலை...

கிராம் நிறையைக் கொண்ட சீமெந்தின் விலை 930 ரூபாயிலிருந்து 960 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம)

## இன்றைய அமை...

த்தில் முக்கிய அவதானம் செலுத்த விருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு, தேசிய வர்த்தகத்துறையினரை பலப்படுத்த வேண்டும்.

தேசிய வர்த்தகத்துறையினரை புறக்கணித்துவிட்டு எந்த நாட்டிலும் சிறந்த பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்த முடியாது.

அவர்களை விடுத்து வெளிநாடுகளில் இருந்து வருவோர் முதலீடுகளில் ஈடுபடுவது பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

இந்தவிடயத்தில் முக்கியமான பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள நிலையில், இன்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் தாம் இது குறித்து சில விடயங்களை பேசவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம)

## பிரதமர் ரணிலு...

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளன.

இதனால் நாட்டின் முன்னேற்றம் மற்றும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ரணிலின் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு தங்களின் ஆதரவினை வழங்க வேண்டுமென உதய கம்மன்பில இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும், இன்று செவ்வாய்க்கிழமை கூடவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபாநாயகர் கருஜயசூரியவிடம் ஒப்படைக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## பாடசாலைகளு...

குறித்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்டி - திகன நகரில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கண்டி நிர்வாக மாவட்ட பகுதியில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


**45,000 – ஒரு இலட்சம்**
வரை வருமானம் + OT + கமிஷன் உடன் 200க்கு மேற்பட்ட
**டுபாய் சுப்பர் மார்க்கட் வேலைவாய்ப்பு**
விற்பனை ஊக்குவிப்பாளர் (Merchandisers)
காட்சிப்படுத்தல் உதவியாளர் (Shelf Stockers)
துப்பரவுப் பணியாளர் (Cleaners) ஆண்/பெண்
தொழிலாளர்கள் (Labourers)
இலவசம் அதிநுபிந வர்த்தக - சந்தைப்படுத்தல் சான்றிதழ்தர பயிற்சி
குறிப்பு கம்பனி பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம் அறிவிடப்படும்
விபரங்களுக்கு 0777 324 004
TGL Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222
SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே: 021 - 222 00 11
(C-1789)



**SB Travels and Tours Pvt Ltd**
Air Ticketing இல் அனுபவமுள்ள வேலை ஆட்கள் தேவை.
இல.212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 021 222 9555
Email: sbtravelsjaffna@gmail.com
(C-1796)



**வீடு வாடகைக்கு**
பலாலி வீதி (ஒஸ்காலேன் அருகில்) உரும்பிராயில் உள்ள புதிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :
077 069 0275
(3068)



அறிமுகம் - Rs. 250/=
**சிக்கன் பிரியாணி**
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C-1778)



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af **பிரெஞ்சு மொழி**
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(C-1741)



**Techno World**
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
**A/L தொழில்நுட்பப் பிரிவு**
எமது நிறுவனத்தின் கடந்த கால சாதனைகள்
- A/L 2017 இல் தேசிய அளவில் 60இற்கும் மேற்பட்ட மாணவர்களை தொழில்நுட்ப பீடத்துக்கு அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
- A/L 2018 மாணவர்களுக்கான மாதாந்த பரீட்சை, மீட்டல் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.
- A/L 2019 முதல்நிலைப் பாடசாலைகளில் அதியுயர் புள்ளியை பெற்ற மாணவர்களை உருவாக்கியமை.
- A/L 2020 மாணவர்களுக்கான இரண்டாவது பரீட்சைகளை முடித்த பெருமையுடன்.

பொறியியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்ப செய்முறை வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் மூன்று மணித்தியாலங்கள் நடைபெறுகின்றது.
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்களால் மாத்திரமே கற்பிக்கப்படுகின்றது
மாணவர்களுக்கு தனிப்பாட அனுமதி உண்டு
**A/L 2020, Day Class புதிய பிரிவு**
**07.03.2018 காலை 8.00 மணிக்கு**
**தொடர்பு: 077 017 5346**
(C-1774)



3 - 6 மாத ஹொட்டேல் பயிற்சியுடன் சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து செல்லும் ஏற்பாடு!

ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பலில் வேலைவாய்ப்பு
எந்தவொரு நாட்டுக்குமான என்ன வகை விசாவையும் வெல்ல
அழையுங்கள் 077 36 16 798
SIKARAM ACADEMY 9th Year
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய பின் வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின் வீதி)
021 221 9 221 www.sikaram.lk
(C-1759)



**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK-550/=Kg
கனடா-1050/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-1777)



**பதவிக்கான தேடல்**
சர்வதேச ரீதியில் இயங்கிவரும் எமது Dynamic நிறுவனத்தின் புதிய கிளைகளான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆரம்பமாக உள்ளதால் 6 வகையான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.
- O/L, A/L உள்ளவர்கள் உடனே அழையுங்கள்.
- O/L இல்லாதவர்களுக்குமான விசேட வாய்ப்புக்கள்.
- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

0775566224, 0215679001
(3127)



**Bsc, B.com, B.B.A, B.A (Medium Tamil)**
**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**
- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.
- இப்பட்ட நெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- பதிவு முடிவுத் திகதி - 15.03.2018
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
- பட்டநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழக இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

குறிப்பு: விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்.
- MA, M.Com, MBA, MSC, PGD பதிவுகளும் நடைபெறுகின்றன.

யாழ் இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
021 222 8148, 077 846 9721
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(C-1794)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.